தென்மொழி

இறுதி உரை!

ஆட்டிப் படைக்கும் அரசுக்கும் ஆரியர்க்கும்
ஈட்டியால் செந்தமிழர் தீட்டும் இறுதியுரை!
கூட்டில் அடைத்தீர்; குமுகாயச் சீரழித்தீர்;
வாட்டி வதைத்தீர்; வறுமை யுறச்செய்தீர்!
நீட்டிப் படுத்திடவும் கூனுமல் நின்றிடவும்
மாட்டாமல் எம்மவரை வல்லடிமை செய்துவிட்டீர்!
காட்டிக் கொடுக்கும் கயவரிங்கு உள்ளவரை
நாட்டின் விடுதலைக்கே நாவசைக்க மாட்டீர்கள்.
கேட்டோம்; கிளர்ந்தெழுந்தோம்; கீழென்றே எண்ணிவிட்டீர்.
கூட்டிலுள்ள ஆவி கொதித்திடுமுன், செங்குருதி
சூட்டினுல் பொங்கிச் சுழன்றிடுமுன், இந்நிலத்துக்
கோட்டைக் கடந்துய்வீர்! இன்றேல் கொடிமுகத்து, உம்
கூட்டிற் கமைப்போம் குழி!

சுவடி: 7; ஓலை-3. மேழம் தி.பி. 2000.

காசு

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E.book No.7415

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது: வசைகள் என்னை உறுதியாக்குகின்றன: பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது, உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது; தமிழ் எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது; இறையுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது; என் வாழ்க்கைக் குப்பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடடபோடா! —பெருஞ்சித்திரன்.)

() "தலையிழந்தது தமிழகம்" "புதிய அமைச்சரவை" இரு ஆசிரிய உரைகளிலும் குறைகண்டுள்ளார் நெய்வேலியார். தென்மொழியின் தமிழ்த்தொண்டையும் மொழிநூலறிஞர் பாவாணரின் அஃகியகன்ற ஆய்வுத் திறனையும் உணராதவர்கள், தென்மொழி இதழ் வாங்குவதை நிறுத்தியதில் வியப்பொன்றுமில்லை. இவர்களெல்லாரும், தென்மொழியைத் தொடர்ந்து படியாமல் ஓரிரு இதழ்களைப் படித்துவிட்டு, உங்கள் பாலும் பாவாணர் பாலும் குறைகாணும் பேதைகளாவர். இவர்களா உங்களைப் பார்த்து நீங்கள் தமிழை எப்படி வளர்க்க முடியும்? உங்களால் தமிழ் தாழ்ந்துதான் போகும் என்றும் உயராது என்றும் கூறுவது? இத்தகையவம்பளக்கும் தெம்மாடியர்களின் அறியாமையை என்னென்பது? தென்மொழியிதழ் ஆறாண்டுக் காலத்தில் ஆற்றிய தமிழ்த்தொண்டைவிட, இவர்கள் இருபதாண்டுகளில் தமிழையும் தொன்மையான தூய சொற்களையும் சிதைத்தமையே மிகுதியென்பது என் அறிவிற்கும் உணர்விக்கும் அறிந்தவரை உண்மையாகும். இத்தகையோர் பொய்யுரையைக் கண்டு தாங்கள் உள்ளம் சோர்தல் வேண்டா. தாங்கள் ஆற்றுகின்ற உண்மைத்தமிழ்ப்பணி வீண்போகவில்லை. அஃது ஆயிர மாயிரம் எழுச்சி மறவர்களை உண்டாக்குகிறது. இலைமறை காயாக இருக்கும் அக்கூட்டத்தின் வலிமை வாய்ப்பு வரும்போது தெரியும் எனச் சென்னையார் கூறியது முற்றிலும் உண்மை. அத்தகைய கூட்டத்தில் யானும் ஒருவன் என்பதை அறிவிக்க மிக மகிழ்கின்றேன். வாழ்க தமிழ்! வெல்க தங்கள் தமிழ்த்தொண்டு!

—சி. கோவிந்தராசன், பெங்களூர்-1. (மேழம் கக)

O மேதகு ஐயா! "விழி! எழு! நட!"

தமிழக விடுதலை மறவர்களுக்கு மறைச்சொற்கள்! ஆம்! மறவுணர்வு கூட்டும் இவ்வீறுகொண்ட சொற்கள் நமக்குக் காப்புக்கருவி ஆகட்டும். தனித்தமிழ் நாட்டுத் தன்னுரிமை விடுதலைப் பணிக்கு நல் விதழாம் 'தென்மொழி' வழிநிற்போம்!

—இரா. குஞ்சிதபாதம், சின்னமனூர். மதுரை மா. வ. (மேழம் கூ)

() தகைமைசால் தண்டமிழ்த்தலைவா! தனித்தமிழ் இறைவா! எம் மனம் மெய்வாய் நிறைவான வணக்கம். தங்களின் கடந்த திங்கள் தென்மொழி ஆசிரியவுரை "தமிழர் உரிமை" விளக்கம் என்போன்ற தொடக்கத் தனித்தமிழ் அன்பர்க்குத் தனிப்பெரும் உடைமையாகும். உண்மைத் தமிழரனைவரும் செம்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7415



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-7: ஓலை-3

மேழம் தி. பி. ௨000 (1969-ஏப்பிரல்-மே)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

வாரியும் பூரியும்.

விடுதலை பெற்ற ஒரு நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சட்டமும் வரலாறும் நமக்குக் கூறுகின்றன. ஆனால் உண்மையில் நாம் பலவகையாலும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம் என்று எண்ணி மனங்குமுற வேண்டியுள்ளது. அறிவியல் முன்னேற்றம் பற்றியும் உலக ஒற்றுமை பற்றியும் அரசியல் வாணிகர்கள் வானளாவப் பேசுகின்றனர். ஆனால் மக்கள் இன்னும் காட்டு விலங்காண்டிகளாகவே இருந்து வருவதைப் பார்த்து உளம்புழுங்க வேண்டியுள்ளது. ஒருபுறத்தே ஒருமைப்பாட்டின் உளறல்; மறுபுறத்தே குல மதக் கொடுமைகளின் கீழ்மை! மக்களைச் சமநிலைப்படுத்தும் முயற்சி ஒருபுறம்; மக்களுக்கு இழிவுசாற்றி அடிமைப் படுத்துமி தீமைகள் மறுபுறம். மதப்பித்தங்களும் குலவெறிகளும் இவ் விந்திய நாட்டை உலகத்தின் சாய்க்கடையாக மாற்றி

www.thamizham.net - Free E book No 7415

யிருப்பதைக் கண்டு நாண வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆரியாவர்த்தம், பாரதநாடு, மெய்யறிவுப் பிறப்பிடம் எனப் பெருமையாகப் பேசப்பெறும் இந்நாட்டைப்போல் கேடுகெட்ட நாடு உலகில் வேறு எங்கும் இல்லை என்று கூறும் வகையில் இங்கு ஒழுக்கக் கேடுகளும், வாழ்க்கைப் புரட்டுகளும் மண்டிக்கிடக்கின்றன. ஆரியப் பார்ப்பனர்களின் நச்சுரைகளால் இந்நாடு தூய்மையிழந்து ஏறத்தாழ மூவாயிரமாண்டுகளாகின்றன. அவர்தம் பொய்யுரைகளும் புரட்டுச் செயல்களும் இந்நாட்டு மக்களை மீளா அடிமைச் சேற்றிலும் அருவருப்புப் படுகுழியிலும் அழுத்தியிருக்கின்றன. முகமதியர் படையெடுப்புக்கு முன்னுள்ள நூல்கள் எதிலுமே குறிப்பிட்டிராத 'இந்து' என்ற 'கற்பனைக் கலவை மதத்'தினால் இந்தியாவே தூய்மையிழந்து கிடக்கின்றது, மக்களிடையே கலந்த இந்துமதம் என்னும் நச்சாறு தூர்க்கப்பெற்று இந்நாடு தூய்மையுறுவது இயலுமா என்று எண்ணிக் கவலையுற வேண்டியுள்ளது. ஆரியப் பார்ப்பனர்கள் வித்திய நச்சு மரங்கள் பன்னூறு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் துளிர்விடத் தொடங்கியுள்ளன. அவர்கள் பின்னிய மதவலைகளும் 'சாதி'க் கண்ணிகளும் மீண்டும் மக்களிடையே பரப்பப் பெற்று வருகின்றன. ஓயாத பெருமுயற்சி. ஒழியாத அழிவு வேலை. இங்குள்ள கோயில் பார்ப்பான் முதல் தில்லி அரசியல் பார்ப்பான் வரை வரிந்து கட்டிக் கொண்டு தங்கள் 'வேத' 'புராண' 'இதிகாசங்'களை யெல்லாம் காத்தே தீர்வதென்றும், தங்கள் புளுகுரைகளுக்கு எவ்வாறேனும் அரண்கட்டியே முடிப்பதென்றும் முயன்று வருகின்றனர். இத்தகைய முயற்சிகளுக்குத் துணையாக நிற்பவர்களுள் திருவாளர் கிருபானந்தவாரியையும், பூரி-சங்கராச்சாரியையும் பற்றி ஒருசில கூறுவோம்.

வாரியார் தமிழர்; மதப்பித்தர்; ஆரிய அடிவருடி. முருகன் பெயரால் ஆரியப் பார்ப்பனர்களின் பொய்புரட்டுகளுக்கு உரமேற்றிக் கொண்டிருப்பவர்; ஊர்தோறும் பார்ப்பனர்களும் பார்ப்பன அடிமைகளும் கொடுக்கும் பெருஞ்செல்வத்தால் தின்று கொழுத்துத் தெருத் தெருவாய் நின்று கதைபாடி ஊரைக் குட்டிச்சுவராக்கி வருபவர். புனிதக்கதைகள் என்ற பெயரில் ஆரவார அருவருப்புகளை ஒன்றுமறியா ஏழைமக்கள் மனங்கொள்ளுமாறு நயமும் நகைச்சுவையும் தோய்ந்த தழுதழுத்த குரலில் அன்றாடம் சொல்லிச் சொல்லி இத் தமிழகத்து மக்களை யெல்லாம் பார்ப்பனப் பயிர்களுக்கு உரமாக்கி வருகின்றவர். இவர்போன்ற தமிழர் அரசியல், கலை, வாணிகம், அரசினர் அலுவல்கள் போன்ற எல்லாத் துறைகளிலும் உளர். அவ்வத் துறைகளிலும் வல்லவீடணப், பிரகலாத, பக்தவத்சல, சுப்பிரமணியன்கள் ஒவ்வொரு நாளும் தந்தந் தினிப்பைகளை நிரப்பப் பார்ப்பனத் திருவேலைகளை மற

www.thamizham.net - Free E book No 7415

வாமல் செய்து வருகின்றனர். பார்ப்பனர்களுக்குத் துணைநிற்கும் இக் காட்டிக் கொடுப்பான்களாலும் குயக் கொண்டான்களாலும் ஆரியம் மீண்டும் தலைதூக்கி வருவது தமிழகத்திற்கு மட்டுமன்றி இவ்விந்திய நாட்டிற்கே பெருங்கேட்டை உண்டாக்கப் போகின்றது. ஆரியப் பார்ப் பனத் தலைவர் இராசாசி ஒன்றிலும் ஈடுபடாமல் பற்றற்ற துறவிபோல் இருந்து இத்தனை முயற்சிகளுக்கும் எருவிடுவோராகவும் இயக்குநராக வும் இருந்து பழந்தமிழ்க் குமுகாயத்தையே அழிக்கக் காலம் பார்த் திருப்பதுடன் இவ்விந்திய நாட்டையே அடிமை கொள்ளத் திட்டமிட் டிருக்கின்றார். "வர்ணானாம் ப்ராஹ்மணோ குரு" என்றபடி அவர் பார்ப்பனர்க்கு மட்டுமன்றி இந்துமத வெறியர் எல்லார்க்குமே அரசி யல், இனத் தலைவராக உள்ளார், தமிழர்க்கும் பிற இந்தியர்க்கும் தன் மானம் குன்றி இருப்பதால் அவர்கள் இப் பார்ப்பன நரி ஊளையிடுவதை யெல்லாம் 'வேதம்' போல் கருதிப் பின்பற்றிவரத் தொடங்குகின்றனர். அரசியல் அதிகாரங்களில் உள்ள தமிழர்களுட் சிலரும்கூட அவர் கருத் துரைகளுக்குப் பெருமதிப்புக் காட்டி வருகின்றனர் என்றால் வேறு கூறு வானேன்?

இனி, வாரியார் போலும் ஆரிய அடிமைகள் ஒருபுறம் தமிழர் உரு வில் தமிழர்களையும் பிறரையும் கெடுத்துக்கொண்டிருக்க, பூரி சங்க ராச்சாரி போன்ற பச்சைப் பார்ப்பன மடத்தலைவர்களும், ஆரிய நச்சுக் கருத்துகளை உதிர்க்கத் தலைப்பட்டு விட்டனர். தீண்டாமை பற்றியும், இந்துமதக் கோட்பாடுகள் பற்றியும் அவர் அண்மையில் கூறியவை பார்ப்பனியம் இன்னும் அழிந்துபோக வில்லை; உயிர்த்துக் கொண்டு தான் உள்ளது என்பதை நமக்கு நன்கு நினைவூட்டுகின்றன. 'சாதி'க் கொடுமைகளை இந்நாட்டில் வித்தூன்றிய இந்துமதமும், அதன் அடிப் படைகளான 'வேத' 'புராண' 'இதிகாச'க் குப்பைகளும் அடியோடு ஒழிந்து போகாதவரை, இந்நாடு விடுதலை பெற்றதாகக் கூறிக்கொண் டிருப்பதில் எள்ளத்துணையும் பொருளில்லை. தீண்டாமை என்னும் கொடுமை இன்று நேற்றன்று, கடந்த பன்னூறு ஆண்டுகளாக இந் நாட்டைச் சீர்குலைத்து வருகின்ற கொடிய தொற்றுநோயாகும். அந் நோயின் நச்சுக் காற்றால் துயருற்ற மாந்தரினம் பலகோடி. நிலாத் தரையில் மாந்தன் காலடி பதிகின்ற இவ்வறிவியல் காலத்து, இக் குடி யரசு நாட்டில் இந்துமதத்தின் தலைவர் என்று விளம்பரப்படுத்தப்பெறும் ஒருவர் தருக்குற மொழிந்த, சட்டத்திற்குப் புறம்பான இம்மொழிகளைக் கேட்டுக்கொண்டு இங்குள்ள அமைச்சர்களும் மக்களும் வாளா விருக் கின்றனர் என்று சொன்னால், ஒன்றால் அவர்கள் ஆரிய வல்லடிமைக ளாக இருத்தல் வேண்டும்; அன்றால் அவர்கள் பெருத்த கோழைகளாக இருத்தல் வேண்டும். குமுகாயக் கொத்தடிமைகள் நிறைந்து விளங்கும்

www.thamizham.net - Free E book No 7415

இந்நாடு அரசியல் விடுதலை பெற்று விட்டது என்பது எத்துணை இழிவு? எத்துணைப் பேதைமை? இந்துமதப் பூசல்களும் வரணாசிரமப் பாகுபாடு களும் உள்ளவரை இந்நாட்டில் ஒவ்வொரு குலமும், ஒவ்வொரு கூட்ட மும் தனித்தனியான பகையினங்களே.

"வேத காலத்தில் உள்ள ஆரிய ஒழுக்கங்களை அப்படியே இனியும் கடைப்பிடித்து வருவேன்" என்று பேசும் கொழுப்புரை இவ்விந்தியக் குடியரசின் மேல் இட்ட சமட்டியடியாகும்; மக்கள் நாகரிகத்திற்கிட்ட சூளுரையாகும்; உலக ஒற்றுமைக்கு அடிக்கப்பெற்ற சாவுமணியாகும். பார்ப்பனியத்தின் வலிந்த வேற்றுமைக் கைகளால் பரந்துபட்ட மக்களை ஒன்றாக இணைத்துவிடத் துடிக்கும் நடுவணரசின் அறியாமையை என் னென்பது? வாரியார்களும் பூரியார்களும் செல்வ வலிவுற்று இந் நாட்டு மக்களை மடயர்களாகவும், கொடுமையாளர்களாகவும் ஆக்கு கின்ற முயற்சி இந்நாட்டின் முன்னேற்றங்கள் அத்தனையையும் தடுத்து நிறுத்தும் பேரணையாகும். இத்தகைய வல்லணைகளை உடைத்துத் தகர்க் காமல் இவ்வரசாட்சியில் சட்டங்களுக்கு ஒரு கேடா? அமைச்சர் களுக்கு ஒரு தேவையா?

'தீண்டாமையைக் கடைப்பிடிப்பது என் பிறப்புரிமை'—என்று பேசு மளவிற்கு அவருக்குத் துணிவைக் கொடுத்தது யார்? அவர் கடைப் பிடிக்க விரும்பும் தீண்டாமை எத்தகையது? வேதக் காலத்தில் நான்கு வரணத்தார்களும் நான்கு வகையான உடை உடுத்தியிருந்தார்களாமே அத்தகைய வண்ண உடைகளையே பூரியார் உடுக்கச் சொன்னாலும் நாம் வியப்படைவதற்கில்லை. (The Social distinction of Vedic times were those of occupation and of colour (Varna) Which implied race, marked also by a difference of dress-white for Brahmins, red for Kshatrias, yellow for Vaisyas and black for Sudras-Short History of India -E. B, Havell)

மநுவினால் கூறப்பெற்ற ஒழுக்கங்களே இனி கடைப்பிடிக்கத் தக் கனவாகும் எனப் பூரியார் முழங்குகிறாரா? பொதுவிடங்களில் தீண்டப் படாதாரை நடக்கவிடக் கூடாது என்பது அவர் எண்ணமா? இந்துக் கள் நடக்கும் தெருக்களில் வரும் தீண்டப்படாதவர்கள் இனி பண்டை முறைப்படி கழுத்திலோ மணிக்கட்டிலோ ஒரு கறுப்புக் கயிற்றைக் கட் டிக் கொண்டுதான் வருதல் வேண்டுமா? பண்டையில் (மிகவும் அண் மைக்காலம் வரை) பூனாவில் உள்ள தீண்டப்படாதவர்கள் தாங்கள் தெருவில் நடக்கும் பொழுது எழும்புகின்ற தூசுகள் பட்டு, இந்துக்கள் தீட்டடையாதிருக்கும் பொருட்டு, தங்கள் முதுகுப்புறங்களில் நீண்ட துடைப்பக்கட்டைகளைச் சுமந்து திரிந்தார்களே, அதுபோலவே இனி

www.thamizham.net - Free E book No 7415

யும் திரியவேண்டும் என்பது பூரியின் கருத்தா? அவர்கள் துப்புகின்ற எச்சில்களை மிதித்துத் தீட்டுப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தங்கள் கழுத்துகளில் எச்சில் படிக்கங்களைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு சென்றார்களே, அவ்வகையில்தான் தீண்டப்படாதவர்கள் இனிநடமாடவேண்டும் என்பது பூரிப்பார்ப்பானின் எண்ணமா? இல்லை மநு தன் நூலின் கூறியிருப்பதுபோல், 'சண்டாளர்கள்' 'பிரதிலோமர்கள்' ஆகிய 'பாகிய' சாதியினர் (தீண்டத்தகாதவர்கள்) நகரத்திற்கு வெளியே சுடுகாடு, மரத்தடி, தோப்பு, மலைப்புழை இவற்றில் குடியிருக்க வேண்டுமா? (மநு 10–50). பித்தளை முதலிய மாழை (உலோக) ஏனங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தாமல் (மநு: 10–51) உடைந்த மண்சட்டிகளில்தான் (மநு: 10–52,54) உண்டுவர வேண்டுமா? பிணத்தின் மேலிட்ட ஆடைகளை அணிந்து கொண்டு (மநு: 10–52) நாய், கழுதை முதலியவற்றைத்தான் வளர்க்க வேண்டுமா? மாடு முதலியவற்றை வீடுகளில் வளர்க்கக் கூடாதா? (மநு: 10–51)

இவை தவிர ஆரியப் பார்ப்பனர்க்கு ஏற்றம் தருகின்ற மநுநூலின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கச்சொல்கின்றாரா பூரிமடத்தலைவர்? அவ்வாறெனில், "கருவூலம் கொள்ளை போனாலும் பிராமணர்க்கு (அரசர்) இடையூறு செய்யக் கூடாது; ஏனெனில் பிராமணரின் வருத்தமும் சினமும் அரசனின் படைகளையும் ஊர்திகளையும் அழியச்செய்துவிடும்" (மநு: 9–313); "தீய செயல்களுடையவராயினும் பிராமணர்கள் போற்றற் குரியவர்களே" (மநு: 9–319); "பூணூல் முதலிய பிராமணர் அடையாளங்களைப் பூணுகின்ற பிறரை அரசன் உறுப்புக் குறைப்பு (அங்கசேதம்) செய்துவிட வேண்டும் (மநு: 9–224);" பிராமணர் பிற இனத் தொழிலாளரிடமிருந்து அவர்கள் உடைமைகளை வலிந்து பிடுங்கிக்கொள்ளலாம். அவர்களுக்கு அப்பொருள்கள் என்றும் உரிமையுடையன அல்ல" மநு : 8–416), "பிராமணர்க்குத் தலையை மொட்டை அடிப்பதே உயிர்த்தண்டனை ஆகும்; பிற சாதியார்க்கு உயிரைப்பறித்தே ஆகவேண்டும் (மநு: 8–378); அரசியல் ஒவ்வொருநாளும் மூன்று வேதங்களையும் 'தர்ம' நூல்களையும் கற்றுணர்ந்த பிராமணரின் கருத்துப்படியே நடைபெற வேண்டும் (மநு: 7–37]" என்பவற்றையும் இவை போன்ற பிற ஒருதலையான–கொடுமையான கட்டளைகளையும் அரசினரும் மக்களும் கடைப்பிடித் தொழுகுவதே தக்கது என்பது பூரியாரின் உட்கிடையோ?

பூரி சங்கராச்சாரியின் நினைவில் தீண்டத் தகாதவர்களாகக் கணக்கிடப்பெறுபவர் யார் யார்? வருணாசிரம முறைப்படி சண்டாளனும் [சூத்திரன் ஒருவனுக்கும் பிராமணப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவன்] க்ஷத்தாவும், சூத்திரனுக்கு க்ஷத்திரியப் பெண்ணிடத்தில் பிறந்

www.thamizham.net - Free E book No 7415

தவன்], அயோகவனும் [சூத்திரனுக்கு வைசியப் பெண்ணிடம் பிறந்தவன்], மேற்கூறிய சண்டாளனும், க்ஷத்தாவும், அயோகவனும் முறையே தந்தம் இனப்பெண்டிரிடத்தும், நால்வரணப் பெண்டிரிடத்தும் பெற்ற பதினைந்துவகையான மக்களும், ஆகப் பதினெட்டுவகைச் சாதியாரே தீண்டப்படாத பாகிய சாதியினர் என்று மநு குறிப்பிடுகின்றார். பூரியும் அவர்களைத்தான் தீண்டமாட்டேன் என்று குறிப்பிடுகின்றாரா? இவர் குறிப்பிடுபவர்களுக்கு என்ன அடையாளங்கள்? பூரி சங்கராச்சாரியின்தாய் இங்குக்குறிப்பிடப்பெற்றிருக்கும் ஓரினத்தானிடமும் அவரைப் பெற்றெடுக்கவில்லை என்பதற்கு என்ன உறுதி கூறிவிட்டுப் போயிருக்கின்றாள்? அல்லது இவர் குறிப்பிடும் தீண்டத்தகாதவர்கள் எல்லாரும் மநு எழுதிவைத்த வகைப்படி பிறந்தவர்கள்தாம் என்பதைக் கண்டுபிடிக்கப் பூரியார் என்ன அளவுகோல் வைத்திருக்கின்றார்? இவருக்கு இத்தகைய வேலையைக் கொடுத்த அதிகாரி யார்? ஒருவனைத் தீண்டத்தகாதவன் என்று கூற பூரிப் பிராமணனுக்கு எவர் அதிகாரம் கொடுத்தது? இந்த ஆளின்மேல் பிழையில்லை. இப்படிப்பட்ட ஒருவரை, சாதி வெறியரை இன்னும் நார் நாராகக் கிழித்தெறியாமல் வைத்திருக்கின்றார்களே அவர்களின் மேல்தான் பிழை! "தீண்டாமையைக் கடைப்பிடிப்பேன்" என்று கூறிய இவர் வாயில் மநுவின் முறைப்படி, ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாலும் குற்றமில்லை. தென்னகத்து மண்ணில் இவர் கால் வைப்பாரானால் ஒருகால் அது நிறைவேறலாம்.

பிராமணியம் என்றைக்கும் சாகாத ஒரு நச்சுக் கொடி. அது வேருடன் கல்லி யெறியப்பட்டாலொழிய இந்நாட்டிலுள்ள மக்கள் முன்னேறப் போவதில்லை. காந்தியாரின் பெயரைக் கூறிக்கொண்டும் கைந்நூல் நூற்றுக்கொண்டும் இராம வழிபாடுசெய்து பிழைக்கும் அநுமன்கள் இந்நாட்டில் உள்ளவரை பிராமணியம் இருந்து கொண்டுதான் இருக்கும். பேராயக் கட்சியே பிராமணியத்திற்குத் தீனிபோடுவது. இராசாசியின் உரிமைக் கட்சியே பிராமண உரிமையைக் கட்டிக் காப்பது. இக்கட்சிகளில் உள்ளவர்களின் துணிவாலேயே வடநாட்டுப் பூரியாரும், தென்னாட்டு வாரியாரும் தம்தம் வினைப்பாடுகளை மிகத் துணிவாகவும், மிக விரிவாகவும் செய்து வருகின்றனர். மற்றப்படி அறிவியலும் மாந்தவுரிமையும் மிகவும் உயர்ந்து விளங்கும் இக்காலத்தில் இவர்கள் இந்தவகை வெறிக்கூத்தும் பேயாட்டமும் ஆடியிரார். தமிழர்கள் இந்நிலையில் ஒன்றைக் கருத்தாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழர்க்கு நேர்ந்த எல்லாத்தீமைகளும் வடதிசைப் பக்கமிருந்தே வந்துள்ளன. வேதகால ஆரியச் சூழல் இன்னும் அழிந்துவிடவில்லை. சமற்கிருதம் ஒருவேளை இந்திமொழிக்கு மாறாக ஒருமைப்பாட்டிற்குகந்த மொழியென்று வடவாரிய அரசால் கொள்ளப்படினும் கொள்ளப்பட

www.thamizham.net - Free E book No 7415

லாம். இந்தியத் தலைமையிடத்தை அடுத்தபடி ஓர் ஆரியப் பார்ப்பனன் பெற்றாலும் நாம் வியப்பதற்கில்லை. கூட்டுணர்வோடு ஆரியப் பார்ப்பனர்கள் ஆற்றுகின்ற இனப்போராட்டம் மீண்டும் வெற்றி பெறுமானால் தமிழன் தன் இனத்தையே மறந்துபோக வேண்டியதுதான். ஏனெனில் தமிழனின் உள்ளத்தே இன்னும் இனவுணர்வும் மொழியுணர்வும் இளமைப் பருவத்திலேயே உள்ளன. அவன் முளையும் குல மத மயக்கங்களால் நன்றாகச் சிதைக்கப்பட்டு உள்ளது. அவன் மனத்தில் தூவப் பெற்ற வேற்றுமை வித்துகள் அங்கும் இங்கும் முளையிட்ட வண்ணமாகத்தான் உள்ளன. தமிழனிடத்து அவ்வப்பொழுது தலைதூக்கும் ஒற்றுமை உணர்ச்சிகளை ஊடுருவி அழிக்க இன்னும் பார்ப்பனர்கள் முனைந்து கொண்டுதான் உள்ளனர். இந்நிலையில் தமிழன்தான் பார்ப்பானாகிக்கொண்டு வருகின்றானேயன்றி ஒரேயொரு பார்ப்பானோ பார்ப்பனத்தியோ தமிழுணர்ச்சி பெற்றுவிடவில்லை. பார்ப்பன வெறுப்புக் குறைந்துபோன தமிழனைப் பார்க்க முடிகின்றதே தவிரப் பார்ப்பனியப் பற்றுக்குறைந்த ஒருவரையே காண முடியாத பொழுது, தமிழ்ப்பற்று மிகுந்த ஒரு பார்ப்பன உயிரைப் பார்ப்பது மிகவும் அரிதாகின்றது. பார்ப்பனர் தம் இன வழக்கத்தை விடாதவரை பார்ப்பனியம் என ஒன்று இருக்கவே செய்யும்.

எனவே தமிழர் இனவொற்றுமை பெறாமல் நாட்டுக்கோ, மொழிக்கோ, இனத்திற்கோ வந்த அல்லது வருகின்ற எத்துணைச் சிறிய தீமையையும் அகற்றிவிட முடியாது. தமிழர் இனவொற்றுமை பெற வேண்டுமாயின் அவர்கள் தம்மிடம் உள்ள குலவேற்றுமைகளை அடியோடு களைந்துதானாக வேண்டும். மதச்சுவர்களையும் சாதிச் சுவர்களையும் அப்படியப்படியே வைத்துக்கொண்டு நாம் இன நலத்தைப் பேணிவிட முடியாது. நமக்குள் ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டு நம் எதிராளியிடமிருந்து வரும் தீமைகளைப் போக்கிவிடுதல் என்பது அறியாமை யாகும். நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் ஏமாளிச் செயலாகும். நம் சாதிச் சழக்குகளை வேரறக் களைந்தாலன்றி நாம் வெற்றியடையப் போவதில்லை. ஆரியப் பார்ப்பனரின் இனவொற்றுமையையும் அவர்தம் அடிப்படைக் கொள்கைகளையும் பார்த்த பின்னாகிலும் நாம் நம் குல இழிவுகளைப் போக்கிக் கொள்ளாமல் இருப்பது நம்மை எத்தனைக் காலமானாலும் அழிவுப் பாதையிலிருந்து மீட்டுக் கொள்ள முடியாமலேயே செய்யும். இதனையுணர்ந்து செயல் படுவோமாயின் நம்மிடை எத்தனை வாரிகளும் பூரிகளும் முளைத்தாலும் அவர்கள் பயனற்றுப் போவார்கள் என்பது திண்ணம். எண்ணிச் செயற்படுவோமாக.



www.thamizham.net - Free E book No 7415

புறப்பட்டாய், நீ!

உரிமையெனும் மெய்க்கொள்கை
தமிழர்க்கென்றும்
உயிர்க்கொள்கை; உயிரைவிட
உயர்ந்த கொள்கை!
நரிமையினும் கீழ்மையராம்
வடவர், உன்னை
நாய்மையினும் கீழெனவே
நடத்திவிட்டார்!
எரிமையத் திருந்ததுபோல்
இதுநாள்மட்டும்
இருந்துவிட்டாய்; உயர்மானம்
இழந்துவிட்டாய்!
கரிமையினும் கருமையுற்றாய்;
கடுகாய்த் தேய்ந்தாய்;
கனித்தமிழால் விழித்தெழுந்தாய்!
கனல்வாய் இன்றே!

புத்துணர்வு பெற்றுவிட்டாய்!
உடலுக்குள்ளே
புதுக்குருதி சுரந்ததின்று!
புறப்பட்டாய், நீ!
பித்துணர்வால் அடிமைநலம்
பேசிவந்த
பெருவாயால் உரிமைநலம்
முழக்குகின்றாய்!
ஒத்துணர்வால் பகைப்புலத்தின்
வேரறுப்பாய்!
உட்பகையாம் பார்ப்பனர்தம்
உயிரைச் சீய்ப்பாய்!
கத்துணர்வால் பயனிலைகாண்!
களிற்றுக் கூட்டம்
கனன்றெழுந்து விட்டதினிக்
கடுகல் நன்றே!

துரை-மாணிக்கம்.

www.thamizham.net - Free E book No 7415

ஆரியப்பூதம்
அடக்கமெழும்புதல்.

0 சமற்கிருதத்திற்கு மட்டுமன்று; இந்திய மொழிகள் எல்லாவற்றிற்கும் மூலமொழி தமிழ் மொழியே!

0 சொற் சுருக்கத்திலும் சொல்வளத்திலும் சமற்கிருதத்தை மிகவும் விஞ்சியது தமிழே!

0 ஆரியரொடு பழகி அறிவிழந்தான் இற்றைத் தமிழன்!

0 வடமொழி ஆகமங்களும் உபநிடதங்களும் தமிழ் நூல்களின் வழியினவே!

0 சோமச் சாற்றைத் தெய்வமாக வணங்கிய ஆரியர் மெய்ப்பொருள் கண்டனரென்பது புளுகுரையே!

0 தெலுங்கத் தீர்ப்பாளர் இராசமன்னாரும், வரலாற்றறிவும், மொழிநூலறிவுமற்ற ம. பொ. சி.யும் தமிழர்க்குப் படிநிகராளியர் ஆகார்!

சமற்கிருதம் தேவமொழி யென்றால் தேவருலகத்திற்குச் செல்வதுதானே! மக்கள் உலகத்தில் அதற்கென்ன வேலை?

O தமிழ்நாடென்று மாற்றியதால்மட்டும் தமிழ் மொழிக்கு நன்மை செய்ததாகாது.

O தமிழக அரசு தமிழ்வளர்ச்சிக்கு ஆவன செய்க.

O தி. மு. க. அரசிற்கு அறிவுறுத்தியும், தமிழ் நாட்டுப் பிராமணரை எச்சரித்தும் உலகத் தமிழ்க் கழகம் விடுக்கும் அறிக்கை!

www.thamizham.net - Free E book No 7415

மீன மாதம் ௯-ம் பக்கல் (18–3–'69) 'மெயில்' தாளில் பின் வருமாறு ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

பள்ளிகளிற் சமற்கிருதம்.

விருப்பப் பாடமாகுமாறு நெருக்கப்படுதல்

"இந்தியச் சமற்கிருத மொழிக்கழகம், சமற்கிருதத்தை வழி நிலைக் கல்வியில் (Secondary Education) எந்த நிலையிலாவது மீண்டும் விருப்பப்பாடமாக்குமாறு, தமிழ்நாட்டு அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

'அக்கழகம் முதலமைச்சருக்கு விடுத்த வேண்டுகோள் மடலில், சமற்கிருதத்தை ௧௦–ஆம், ௧௧–ஆம் வகுப்புக்களில் மட்டும் தெரிப்புப் பாடமாகக் கற்குமாறு இன்றுள்ள ஏற்பாடு "நிரம்பக் குறைவானது" என்று கூறியுள்ளது. ௬–ஆம் வகுப்பிலிருந்தே அதைக் கற்குமாறு ஏற்பாடிருத்தல் வேண்டும்.

"மாபெரும்பாலான பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் சமற்கிருதம் கற்கப்பட்டு வருவதாக அக்கழகம் கூறியுள்ளது. பத்தாயிரத்திற்குக் குறையாத பாடசாலைகளில், வாழ்நாள் முழுதும் சமற்கிருதக்கல்வி யேற்றுக்கொண்ட ஆடவர், அம்மொழியை வழங்கும் கல்வி வாயிலாகவே ஆள்கின்றனர். இத்தேயத்தில் ஐம்பதினுயிரவர்க்குக் குறையாது அதில் விரைவாகப் பேசுகின்றனர்.

"பலர் பூசாரித்தொழிலை மேற்கொண்டு இந்து மதப் பண்பாட்டுக் காவலராகத் தொண்டு புரிகின்றனர். பத்திலக்கத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்க்கை, பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளிற் சமற்கிருதத்திற் சமயச் சொலவங்களை மன்றாட்டு வடிவில் எதிரொலிக்கிறது.

"பண்டைக்காலத்தில் சமற்கிருதத்தில் இலக்கக் கணிதம் (Algebra), வடிவுக்கணிதம் (Geometry) முக்கோணக் கணிதம் (Trignometry), அறிவியல் (Science) ஆகியவற்றை விளக்கும் நூல்களிருந்தன. அணுவியற் கொள்கை முதன்முதல் சமற்கிருதநூல்களில் இடம்பெற்றது. இக்காலத்தில் மேனாடு இந்திய மெய்ப்பொருளியற் கருத்துக்களை மேன்மேலுங் கடன்கொண்டு வருகின்றது. சமற்கிருதக் கல்வி மாணவர்க்குக் கவர்ச்சி யுண்டாக்குமாறு தக்க பாடத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று, அவ்வேண்டுகோள்மடல் கூறுகின்றது."

www.thamizham.net - Free E book No 7415

சமற்கிருதம் தமிழ்நாட்டிற்குத் தேவையல்லாதது மட்டுமன்றி, தமிழுக்குத் தொடக்கந்தொட்டு உயிர்ப்பகையாகவும் இருந்து வருகின்றது. அதன் தோற்றமே தமிழுக்கு மாறாக ஏற்பட்டதே. தமிழை வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளியதும் தாழ்த்தியதும் சமற்கிருதமே. தமிழ்ச்சொற்களை இழிவுபடுத்தியும் வழக்கு வீழ்த்தியும் இறந்துபடச் செய்தும் தமிழின் தூய்மை குலையவும் வளங்குன்றவும் செய்தவை, அதில் தேவையின்றிப் புகுத்தப்பட்ட சமற்கிருதச் சொற்களே. ஆரிய வருகைக்கு முற்பட்ட முதலிருகழகத் தூய தமிழ் நூல்களெல்லாவற்றையும் அழித்ததும் சமற்கிருதமே. மேலையர் திங்களும் வெள்ளியுங் குடிபுகவிருக்கும் இக்காலத்திலும், தமிழரைப் பகுத்தறிவும் தன்மானமும் நெஞ்சுரமும் அற்றஅடிமையராகவும் அஃறிணையாகவும் அமைத்து வைத்திருப்பது சமற்கிருதமே. ஆதலால் சமற்கிருதக் கல்வி தமிழ மாணவர்க்கு எத்துணையும் வேண்டுவதன்று. பிராமணர் தம் பிள்ளைகட்கு வேண்டுமாயின் தம் சொந்தச் செலவில் அல்லது தம் இனச்செலவில் தனியாகச் சமற்கிருதப் பள்ளிகளை ஊர்தொறும் தெருத்தொறும் இல்லந்தொறும் அமைத்துக் கொள்ளலாம்.

மேனாடாயினும் கீழ்நாடாயினும், சமற்கிருதத்தைப் பல்கலைக் கழகங்களில் தலைமையாகப் போற்றிக் கற்பிப்பதற்கு, தமிழின் பெருமையையும் சமற்கிருதத்தின் உண்மையான வரலாற்றையும் அறியாமையே காரணியமாம். குமரிக்கண்டத் தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மையை வெளிநாட்டார் அறிவராயின், அன்றே சமற்கிருதத்தைத் தாழ்த்தித் தமிழை அரியணையேற்றுவர் என்பது திண்ணம். வடமொழி வெறியர் மொழி வெறியே வடிவமாக அமைந்தவராதலின், பத்தாயிரம் பாடசாலைகளில் வாழ்நாள் மாணவராக விருப்பதில் வியப்பொன்றுமில்லை. வழக்கிறந்த மொழிகளையும் செயற்கை மொழிகளையும் விரைவாகப் பேசுவார் இன்றும் உலகத்திலிருப்பதால், அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழியாகிய (Semi-artificial literary dialect) சமற்கிருதத்தை ஐம்பதினாயிரவர் தட்டுத்தடையின்றிப் பேசவல்லார் என்பதிலும், சிறப்பேதுமில்லை.

சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவில் வோலப்பூக்கு (Volapuk) எசுப்பெராந்தோ (Esperanto), இந்தர்லிங்குவா (Interlingua), நோவியல் (Novial) முதலிய பல செயற்கைமொழிகள் இயற்றப்

www.thamizham.net - Free E book No 7415

பட்டன. அவற்றுள் நெடுநாட் பெருவழக்காயிருந்த எசுப்பெராந் தோவைப் பற்றி 'மொழித்தறி' (The Loom of Language) என் னும் மொழிநூலில் வரைந்திருப்பது வருமாறு:-

"பன்னாட்டு மன்றத்தின் (League of Nations) பொதுச் செய லகம் (எசுப்பெராந்தியர் கொடுத்த புள்ளிக் கணக்கைச்சார்ந்து) வெளியிட்ட அறிக்கைப்படி, எசுப்பெராந்தோ மூலநூல்கள், மொழி பெயர்ப்புக்கள், பாடப் பொத்தகங்கள், பரப்புரைச் சுவடிகள் முதலி யன உள்ளிட்டு ஏறத்தாழ நாலாயிரம் வெளியீடுகளைக் கொண்டுள்ள தாகப் பெருமை பாராட்ட முடியும். அஃது அல்பானியாவில் வழி நிலைக் கல்விக்கும் மேல்நிலைக் கல்விக்கும் கட்டாயப் பாடமாயிற்று. சீனத்திற் பீக்கிங் பல்கலைக்கழகம் சில கடவைகளை (Courses) ஏற் படுத்திற்று. மாதிரிதும் இலிசுபனும் பல செருமனிய நகரங்களும் அதை ஊர்காவற் பள்ளிகளின் பாடப்பட்டியிற் சேர்த்தன. பெரும் பிரித்தானத்தில் அது தொழிலாளர் கல்லூரிகளில் மக்கள் விருப்பைப் பெற்றது. பிரைசு பெருமகனார், ஏச்சு, சீ. வெல்சு (H G. Wells). இராபெர்ட்டு செசில் பெருமகனார், ஆர்தர் என்றெர்சன் போன்ற எழுத்தாளரும் அதை ஊக்கினர். இரசியாவில் பொதுமக்கள் கல்வித் திணைக்களம், 1919 சனுவரியில் அதன் தகுதிகளை ஆயவும் ஒரு பன்னாட்டுப் பொதுமொழியைச் சோவியத்துப் பள்ளிகளிற் கற்பிப்ப தின் பொருத்தத்தைப் பற்றி அறிக்கை விடவும், ஒரு குழுவை அமர்த்திற்று. சினேசிபேவ் இடோ (Ido) மொழியை விரும்பினுரே னும், குழு எசுப்பெராந்தோவைத் தீர்மானித்தது. வேய்மர் மக்களாட் சியில், ஐந்து செருமனிய நகரங்கள் எசுப்பெராந்தோவைத் துவக்கப் பள்ளிகளிற் கட்டாயப் பாடமாக்கின. லீபுசிக்கு நகரத்தில் ஆசிரிய ரைப் பயிற்றுவதற்கு ஏற்பட்ட தேசிய எசுப்பெராந்தோக்களரி, உள் நாட்டு மந்திரியாரிடமிருந்து அதிகாரமுறை யொப்புதலைப் பெற்றது. 1921-22 மாரியில், செருமனியில், ஏறத்தாழ 40,000 இளந்தையர்க்கு 1592 கடவைகள் இருந்தன. அவருட் பாதிப்பேர் பாட்டாளி மக்கள்." (பக். 461-2).

இங்ஙனம் ஒரு வகுப்பிற்கும் சிறப்பாக வுரியதல்லாத புதுச் செயற்கைமொழி, 1935 சூன் 8-இல் செருமனியத் தேசியக் கூட்டுட மைக் கல்வியமைச்சர், அந்நாளுக்குப்பின் மூன்றும் அரசில் எசுப் பெராந்தோவைக் கற்பிப்பது சட்ட முரணானதென்று தீர்ப்புச்செய்யும் வரை, ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் சீனுவிலும் பரவியிருந்

திருக்குமாயின், தமிழரும் திரவிடரும் பிறருமாகிய பழங்குடி மக்களை யெல்லாம் பிராமணருக்கு என்றும் அடிமைப்படுத்துதற்கென்றே ஆக்கப்பட்ட சமற்கிருதத்தை, அதன் வாயிலாக மேனத்தாக வாழும் ஒரு வகுப்பாருள் ஒரு பகுதியினர் அதை வாழ்நாள் முழுதுங் கற்று வாய்த்திறமையாகப் பேசுகின்றனரெனின், அஃது இறும்பூது விளைத் தற்கு எள்ளளவும் இடமுண்டோ?

சிவமதமும் திருமால் மதமும் தூய தமிழ மதங்களாதலின், கோயில் வழிபாடோ இருவகைக் குடும்பச் சடங்குகளோ ஆற்றுதற் குப் பிராமணப் பூசாரியரும் வேண்டியதில்லை; சமற்கிருதநடை மொழி யும் வேண்டியதில்லை. இன்று தாழ்த்தப்பட்டுள்ள தமிழ் மக்கள் போன்றே தாழ்த்தப்படாததமிழரும் பண்டு தமிழஉவச்சரைக்கொண்டு தமிழிலேயே இறைவழிபாட்டையும் இருவகைச் சடங்குகளையும் புரிந்து வந்தனர். பிராமணர் தாம் நிலத்தேவரென்றும் தம் முன்னோர் மொழியும் செயற்கை மொழியும் தேவமொழியென்றும் ஏமாற்றியதி னுலேயே அரசருங் குடிகளுமான இடைக்காலத்துப் பழங்குடி மக்கள் ஏமாறி நம்பி ஆரியத்தை யேற்றுப் போற்றி வந்தனரென்றும், வர லாற்றறிவும் மொழியாராய்ச்சியும் மிக்க இக்காலத்திற்கு அவ்வே மாற்று இம்மியும் ஏற்காதென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

இனி, அறியாமைக் குப்பைகளும் இடக்கர்ச் செய்திகளும் மூடப் பழக்க வழக்க வண்ணனைகளும் பொய்புரட்டுகளும் மலிந்த இதிகாச புராணங்களும், தரும சாத்திரம் என்னும் தீயவொழுக்க நூல்களும் தவிர மற்றச் சமற்கிருத அறிவியல் நூல்கட்கெல்லாம் மூலம் ஆரியத் தால் அழியுண்டுபோன தமிழ் நூல்களே என்பதும், தெரிதரு தேற்ற மாம்.

"இனி, இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிற வும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாவுள்ள தொன் னூல்களிறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலா வுள்ள தொன்னூல்களுமிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குண நூல் செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக் கின்ற அத்துணையல்லது முதல்நடு இறுதி காணாமையின், அவையும் இறந்தனபோலும்!" என்று அடியார்க்கு நல்லாரும் (சிலப்பதிகார வுரைப்பாயிரம்),

www.thamizham.net - Free E book No 7415

"எண்ணென்பது கணிதம். அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்ப முதலிய நூல்களுட் காண்க." (திருக்குறள், 392 உரை) என்று பரிமேலழகரும், கூறியிருத்தலையும், சிறுகுழி பெருங்குழி யென்னும் சதுர வாய்பாடுகள் சென்ற நூற்றாண்டு வரை வழங்கியமையும், ஏழுகோளும் பன்னீரோரையும் இருபத்தெழு வெள்ளியும் ஆரியர் வருமுன்பே தமிழர் கண்டிருந்தமையையும், வடமொழி நெடுங்கணக்கும் எண்வேற்றுமையும் தமிழைப் பின்பற்றியுள்ளமையையும், வானளாவப் போற்றிப் புகழப்பெறும் பாணினீயம் (அஷ்டாத்யாயீ) ஐந்திலக்கணமுங் கூறும் தொல்காப்பியம் போலாது நன்னூல்போன்று எழுத்துஞ் சொல்லுமே கூறுதலையும், மாந்தன் இதுவரைகண்ட மொழியிலக்கணத்தின் கொடுமுடியான பொருளிலக்கணம் பெயரளவிலும் வடமொழியில் இல்லாமையையும், சிறு தெய்வங்களையே வேள்வியில் வழிபட்டுவந்த வேத ஆரியர் தமிழரொடும் திரவிடரொடும் தொடர்புகொண்ட பின்னரே கடவுட் கொள்கையை மேற்கொண்டதையும், பிறவற்றையும் தீர எண்ணித் தமிழ ஆரிய நாகரிகங்களின் ஏற்றத்தாழ்வு வெள்ளிடைமலைபோல் விளங்குதல் காண்க. ஆகவே, இந்தியச் சமற்கிருதக் கழகத்தார் இனித் தமிழ் நாடொழிந்த பிற வைதிரங்களிலேயே (பிரதேசங்களிலேயே) சமற்கிருதத்தைப் பரப்பும் வழிகளை வகுக்க.

மீன மாதம் ௪௦-ம் பக்கல் (23—3—'69) 'மெயில்' தாளில்,

"தமிழ்நாட்டுப் பெற்றோர் கழகக் கூட்டமொன்று தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளிற் சமற்கிருதக் கல்விக்கு ஏந்துகள் (வசதிகள்) ஏற்படுத்தவும், சமற்கிருத ஆசிரியரின் குறைபாடுகளை நீக்கவும், வழிகள் வகுக்குமாறு இம்மாதம் 23-ஆம் பக்கல் கூடுகின்றது" என்னும் *அறிவிப்பும், திரு. பி. எப். தேவிசு (P. F. Davis) என்பவரின்* **சமற்கிருதப்படிப்பு (Sanskrit Studies)—துல்லியமும் (Precision)—தீர்பும் (Finish), அறிவுவளர்க்குந் திறனும் (Educative Value)** *என்னும் தலைப்புக்கொண்ட கட்டுரையும் வெளிவந்தன. அன்று நடைபெற்ற சமற்கிருதக் கல்வி மாநாட்டொடு இக்கட்டுரையைத் தொடர்பு படுத்தி நோக்கும்போது, அம்மாநாட்டு முடிபு வலியுறுமாறு வேண்டுமென்றே இது முற்பட வரையப்பட்டதாகத் தெரிகின்றது. கட்டுரையாளர் சமற்கிருதச் சொல்வளத்தையும் இலக்கியச் சிறப்பையும் எடுத்துக் கூறியதில் எவ்வகைக் குற்றமுமின்று. ஆயின், அம்மொழியொன்றே அப்பண்புகளையுடைய தென்றும், அதனால் அதன் வாயிலாகவே அச் சிறப்புகளை நுகர்ந்தின்புறமுடியு மென்றும் கூறியிருப்பது, அவரது தமி*

www.thamizham.net - Free E book No 7415

ழறியாமையைக் காட்டுவதுடன், பிறரையும் அவ்வறியாமைக்குட் புகுத்துவதாயிருக்கின்றது.

சடமும் (Matter) ஆவியும் (Spirit) இசைவுற வளர்ச்சிபெறல்.

சடத்தையும் ஆவியையும் இசைவுற வளர்த்தலைச் சமற்கிருத இலக்கியத்தில்தான் காணமுடியுமென்பது கட்டுரையாளர் கருத்து.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்." (குறள்-2)

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு." (ஷை–72)

"இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (ஷை–314)

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." (ஷை–350)

என்ற திருவள்ளுவரே,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு." (ஷை–247)

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்." (ஷை–751)

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்." (ஷை–479)

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்." [ஷை–1046]

என்றுங் கூறியிருத்தல் காண்க.

சொற்சுருக்கம்:—

'சுருங்கச் சொல்லல்' என்பது தமிழ் இலக்கண நூல்கட்கெல்லாம் இன்றியமையாத பத்தழகுகளுள் ஒன்றாம்.

"எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்." [518]

"அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்." [519]

என்று வணிகர் கூடச் சொல்லிலுஞ் செட்டாயிருக்குமாறு தொல்காப்பியம் நெறியிடுகின்றது.

"முன்னத்தின் உணருங் கிளவியும் உளவே
இன்ன என்னுஞ் சொன்முறை யான." [942]

www.thamizham.net - Free E book No 7415

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே" [1361]

என்பனவும் சொற்சுருக்கம் பற்றிய அந்நூல் நூற்பாக்களே.

"பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்." [குறள்-196]என்றார் திருவள்ளுவர். சொற்சுருக்கம் பற்றியே அவர்தம் நூற்குக் குறள்வெண்பா யாப்பைத் தெரிந்து கொண்டார். வடநூலார் சூத்திர யாப்பை மேற்கொண்டதும் தமிழ்நூலாரைப் பின்பற்றியே. பாணினியின் அளவிறந்த சொற் சுருக்கம் குன்றக்கூறல் என்னுங் குற்றந் தங்குவதாகும். ஆதலால், சமற்கிருத இலக்கியமே சொற் சுருக்கத்திற்குச் சிறந்ததென்று கட்டுரை யாளர் கூறியிருப்பது பொருந்தாது.

துல்லிபம்:

ஒரு சொல் துல்லிபமாய் ஆளப்பெறுவதற்கு நுண்பொருள் வேறு பாடு கொண்ட ஒரு பொருட் பல சொற்கள் இன்றியமையாதனவாம். இவ்வகைச் சொல்வளத்தில் தலைசிறந்தது தமிழே. தெற்கே ஈராயிரங் கல் தொலைவு நீண்டு பரந்திருந்த பாண்டிநாட்டொடு அதில் வழங்கிய ஆயிரக்கணக்கான உலகவழக்குச் சிறப்புச் சொற்கள் முழுகிப்போன பின்பும், முதலிரு கழகமும் இயற்றிய ஆயிரக்கணக்கான தூய பல் துறை நூல்களொடு அவற்றில் ஆளப்பெற்ற ஆயிரக்கணக்கான இலக் கிய வழக்குச் சிறப்புச் சொற்கள் இறந்துபட்ட பின்பும், இலை, தாள், தோகை, ஓலை என்னும் நால்வகை இலை வேறுபாடும்; அரும்பு, போது, மலர், வீ, செம்மல் என்னும் ஐவகைப் பூ வேறுபாடும்; பிருக்கு, பிஞ்சு, காய், பழம் [கனி], வற்றல் [நெற்று] என்னும் ஐவகைக் காய்வேறு பாடும்; கச்சல் [வாழை], வடு [மா], மூசு [பலா] என்னும் மூவகைப் பிஞ்சு வேறுபாடும்; இவைபோன்ற பிறவும், இன்றும் தமிழிலன்றி வேறெம் மொழியிற் காணமுடியும்?

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப் பெண்டிர் இளம்பருவத்தை எழுநிலையாகவும்; ஊடல், புலவி, துனி என மணவியர் சடைவை முந்நிலையாகவும்; வகுத்துக் கூறியது தமிழல்லாது வேறு எம்மொழி?

இன்றும் ஆங்கிலமும் சமற்கிருதமும் அறியாத நாட்டுப்புறத் தமிழ் மக்கள் கொசுவும் உலங்கும் வேறென்றும், பொறியும் (Machine) சூழ்ச்சியமும் [Engine] வேறென்றும் அறிந்திருப்பது, அவர் முன் னோர் மொழியின் சிறப்பை யுணர்த்தும். கொசு பகலில் வழங்குவது; கடியாதது; கண்ணிலும் புண்ணிலும் அழுகற் பழத்திலும் மொய்ப்பது: உலங்கு இரவில் வழங்குவது; கடிப்பது. அதிற் சிறியது நுளம்பு.

www.thamizham.net - Free E book No 7415

யானையைக் குறிக்க ஆம்பல், உம்பல், உவா, எறும்பி, ஓங்கல், கடமா, கம்பமா, கரி, கவளமா, கடிவை, கறையடி, கைம்மலை, கைம்மா, சிந்துரம், தும்பி, தூங்கல், தோல், நால்வாய், பகடு, பிணிமுகம், புகர் முகம், புழைக்கை-பூட்கை, பெருமா, பொங்கடி, மதமா, மருண்மா, மற மலி, மொய், வழுவை, வாரணம், வேழம் முதலிய பல தூய தென் சொற்கள் உள்ளன.

ஆயம், கிளை, எழிலி, கனம், கார், காளம், குயின், கொண்டல்' கொண்மூ, செல், புயல், மங்குல், மஞ்சு, மாசு, மால், முகில், மை, வான்-வானம், விண்-விண்டு முதலிய சொற்கள் முகிலைக் குறிக்கப் பயிலப் பெறுகின்றன.

முதலையை இன்று அலிகேற்றர் [Aligator], கிராக்கொடைல் [Crocodile], கேவியல் [Gavial] என்று மேலை யறிஞர் மூவகை யாக வகுத்திருப்பது போன்றே, பண்டைத் தமிழரும் தமிழகத்து முத லையை இடங்கர், கராம், முதலை என மூவகையாக வகுத்திருந்தனர்,

உண்ணல், தின்னல், நக்கல், பருகல், சப்பல், விழுங்கல் என்னும் அறுவகை யுண்டிகளையும் பண்டைத்தமிழர் அறிந்து, அவற்றை அவற் றிற்குரிய சொல்லாற் குறித்தனர். ஆரியரொடு பழகி அறிவிழந்த இற் றைத் தமிழனே சோறு தின்னல் என்றும் குளம்பி [காப்பி]சாப்பிடுதல் என்றும், மரபு தவறி வழங்குகின்றான்.

இனி, சமற்கிருதத்திலுள்ள ஒரு பொருட் பல சொற்களுள் பாதி தமிழும் திரவிடமும் ஆகுமென்றும்; பொதுச் சொற்களுள் ஐந்திலிரு பகுதி தமிழும், ஒரு பகுதி திரவிடமும், ஒருபகுதி பிராகிருதமும், ஒரு பகுதியே ஆரியமும் ஆகும் என்றும்; அறிக.

தீர்பு: சமற்கிருதம் பட்டை தீர்ந்த மணிபோலத் தீர்புள்ளதென்று கொண்டு, 'ஸம்ஸ்க்ருத' என்ற சொல்லே பண்பட்டதென்று பொருள் படுவதாகக் கூறியுள்ளார் கட்டுரையாளர். ஸம்ஸ்க்ருத என்னும் சொற்கு ஒன்று சேர்க்கப்பட்டது என்பதே அடிப்படைப் பொருளாம். இச்சொல் ஸம்-க்ரு என்று பிரியும். 'ஸ்' எழுத்துப்பேறு, ஸம்-க்ரு என்னும் கூட்டடிக்கு, "to put together, form well, join together, Compose, RV" என்றே முதற்கண் பொருள் கூறியுள்ளது **மானியர் வில்லியம்சு** சமற்கிருத-ஆங்கில அகரமுதலி, ஸம்-கூட, க்ரு-செய். கும் என்னும் தென்சொல்லே வடமொழியில் ஸம் எனத் திரிந்துள்ளது.

கும்முதல் கூடுதல், கும்-கும்மல், கும்-கும்பு-கும்பல், கும்-குமி-குமி யல், குமி-குவி-குவியல், கும்மல்-L. Cunulus. E. Cumulute,

www.thamizham.net - Free E book No 7415

கும்-L. Cum.E. com.con. gk. Sym.Syn. Skt. ஸம். இதி லிருந்து சமற்கிருதத்தின் திரிபுமிகையைக் கண்டுகொள்க.

தமிழ் தெற்கில் முழுகிப்போன குமரிக்கண்டத்தில் தோன்றி வளர்ச்சி யடைந்தது. தமிழ் வடக்கிற் சென்று திரவிடமாகத் திரிந்தது. திரவிடமே வடமேற்காகச் சென்று ஐரோப்பாவின் வடமேற்கு மூலையை முட்டி ஆரியமாகமாறி, பின்பு தென்கிழக்காக வந்து கீழையாரியமாக இந்தியாவிற்குட் புகுந்து வழக்கற்றது. அவ்வழக்கற்ற ஆரியமும் அக் காலத்து வடஇந்திய வழக்கு மொழியாகிய பிராகிருதமுங் கலந்ததே வேத ஆரியம். அவ்வேத ஆரியமும் திரவிடமுந் தமிழுங் கலந்ததே சமற்கிருதம். இங்ஙனம் ஆரியமும் பிராகிருதமும் திரவிடமும் தமிழும் கலந்து ஒன்றாக்கப் பட்டதினாலேயே, வடமொழி ஸம்ஸ்க்ருத எனப் பட்டது. க்ரு என்பது கரு என்னும் தென்சொல்லின் திரிபாம். கருத்தல் செய்தல், அவ்வினை இன்று வழக்கற்றது. கருவி, கருமம் என்னும் தென் சொற்களின் முதனிலை கரு என்பதே. சொன்முதல் உயிர்மெய் யின் உயிர்நீக்குதல் வடமொழி யியல்பாம்.

எ-டு: துருவு-த்ரு, பெருகு-ப்ருஹ், திரு-ச்ரீ, மரி—ம்ரு.

இதனால், தமிழே ஆரியத்திற்கு மூலமானதும் திருந்தியதும் பண் பட்டதும் ஆகும் என அறிக.

அறிவுறுத்துந்திறன்: சமற்கிருத இலக்கியத்துள்ள நற்கூறுக ளெல்லாம் தமிழென்றும், தீக்கூறுகளெல்லாம் ஆரியம் என்றும், பொதுவாக அறிந்துகொள்க.

எ-டு:

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." [குறள்-972]

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்." [ஷை-133]

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்." [ஷை-505]

என்றார் திருவள்ளுவர். பிறப்பாற் சிறப்பில்லை யென்பதும், விருப்பமும் திறமையும் பற்றித் தொழில் வேறுபாடும் தொழில் வேறுபாடுபற்றிக் குலவேறுபாடும் உண்டாகுமென்பதும், ஒருவன் தொழில் மாறும்போது குலமும் மாறும் என்பதும், குலவுயர்வு தாழ்வு ஒழுக்கமுந் துப்புரவும் உண்மை யின்மையாலேயே யன்றித் தொழில் வேறுபாட்டாலில்லை யென்பதும், மக்கள் தொகை பெருகப் பெருகத் தொழிலும் பெருகுமா யினும் எல்லாத் தொழிலும் கல்வி காவல் வணிகம் உழவு என நாற்பா

www.thamizham.net - Free E book No 7415

லாய் அடங்குமென்பதும், அதனால் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என நாகரிக மருதநில மக்கள் நாற்பெரு வகுப்பாராய் அமைவர் என்பதும், ஏனைக் குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மாந்தராகிய குறவரும் ஆயரும் வேட்டுவரும் பரவரும் [நுளையரும்] மருதநில மக்களினும் நாகரிகங் குன்றியவ ரென்பதும், பண்டைத்தமிழ் நூல்களால் அறியக் கிடப்பனவாம்.

ஆயின், சமற்கிருத நூல்களோ, பிராமணன் சத்திரியன் வைசியன் சூத்திரன் என்னும் நாற்குலங்களையும் இறைவனே படைத்தானென்றும், அங்ஙனம் படைத்ததாக இறைவனே சொன்னானென்றும்[பகவற்கீதை, 4: 13); புருடன் [புருஷ] என்னும் உயிரின மூல வடிவத்தின் முகத்தினின்று பிராமணனும், தோளினின்று சத்திரியனும், தொடையினின்று வைசியனும், பாதத்தினின்று சூத்திரனும் தோன்றினர் என்றும் [இருக்கு வேதம், 10–ஆம் மண்டலம், 90–ஆம் மந்திரம் புருஷசூக்தம்]; பிராமணனுக்கு மற்ற மூவரும் தொண்டு செய்ய வேண்டுமென்றும், துறவும் வீடுபேறும் பிராமணனுக்கே உரியனவென்றும்; முக்குண வேறுபாட்டாலும் பழவினையாலும் நாற்குலமும் அமைவதாற் குலம் பிறவி பற்றியதென்றும்; நாற்குலமும் முறையே ஒன்றினொன்று தாழ்ந்தவை யென்றும்; ஒருவன் எவ்வெத் தொழிலை மேற்கொள்ளினும் அவன் குலம் அவன் இறக்கும்வரை மாறாதென்றும்; நாற்குலத்தாரும் முறையே வேதமோதி வேள்வி வளர்த்தும், போர்செய்து காவல்மேற்கொண்டும், வணிகமும் உழவும் ஆற்றியும், கைத்தொழிலுங் கூலிவேலையுந் தொண்டுஞ் செய்தும், வாழவேண்டுமென்றும்; பிராமணன் சமையத்திற்கேற்ப எத்தொழிலையும் மேற்கொள்ளலா மென்றும்; அவன் நிலத்தேவன் (பூசுரன்) என்றும், வேத மொழியும் சமற்கிருதமும் ஆகிய கீழையாரியம் தேவமொழியென்றும்; உண்டி, உடை, உறையுள், உடைமை, பெயர், பழக்கவழக்கம், சடங்கு, தண்டனை முதலிய எல்லாவகை நிலைமைகளும் குலத்திற்கேற்ப வேறுபட்டிருத்தல் வேண்டுமென்றும்; இத்தகைய பிறவுமே கூறுகின்றன.

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை." குறள்–1031

"உழுவார் உலகத்தார்க் காணிஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து." குறள்–1032

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்." குறள்–1033

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்." குறள்–1034

www.thamizham.net - Free E book No 7415

"இரவார் இரப்பார்க் கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." குறள்–1035

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கு நிலை." குறள்–1036

என்றது தமிழ் அறநூல்.

"சிலர் பயிரிடுதலை நல்ல தொழிலென்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்புப் பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் மண்வெட்டியும் பூமியையும் பூமியி லுண்டான பலபல ஜெந்துக்களையும் வெட்டுகிறதல்லவா?" என்றது வடமொழி அறநூல்.

—மநுதர்ம சாஸ்திரம் (இராமாநுஜாசாரியர் மொழிபெயர்ப்பு, 10: 84)

இனி, "வால்மீகியிலிருந்து ஒரு வரி அல்லது காளிதாசனிலிருந்து ஓர் உவமை அல்லது உபநிடதங்களிலிருந்து ஒரு விழுமிய கூற்று, நம் நெஞ்சாங்குலை நரம்புகளைத் தீண்டி, இந்தியாவில் மாந்தன் தோன்றிய காலத்திற்குக் கொண்டுபோய்விடும். முந்தியல் காலத்தனவும் முன்னோரைப்பற்றியனவும் உள்மன வுணர்ச்சியனவுமான ஆயிரம் நினைப்புக் களை நம்மில் தூண்டிவிடும்." என்றார் கட்டுரையாளர். அவர் திருக்குறளும் சிலப்பதிகாரமும் திருக்கோவையும் திருமந்திரமுங் கம்பவிராமாயணமும் படித்திருந்தால் அங்ஙனங் கூறியிரார்.

"இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று." குறள்–100

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று." குறள்–929

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை." குறள்–964

"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்." குறள்–1302

என்னும் திருக்குறளுவமைகளையும்,

"எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்." 1: 9: 41

www.thamizham.net - Free E book No 7415

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரை யொத்தார்."
1: 20: 19

"சாகாவ ரத்தலைவ ரிற்றிலக மன்னன்
ஏகாவ ரக்கிகுடர் கொண்டுடனெ முந்தான்
மாகால சைப்பவட மண்ணினுற வாலோ
டாகாய முற்றகத லிக்குவமை யானன்." 5. 1: 85

என்னும் கம்பவிராமாயண வுவமைகளையும் வெல்வன இந்நானிலத்தில் எந்நிலத்து நூலினு முண்டோ?

"இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே." 1514

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்." 2290

என்னும் திருமந்திரத்தினுஞ் சிறந்த வுண்மைகளை உபநிடதங்கள் எடுத்துக்கூற முடியுமோ? மேலும், வடமொழி ஆகமங்கள் போன்றே உபநிடதங்களும் தமிழ்நூல்களின் வழியனவே என்று கட்டுரையாளர் அறிவாராக. ஐம்பூதங்களையும் இயற்கைத் தோற்றங்களையும் வானச்சுடர்களையும் சோமச்சாற்றையும் தெய்வமாக வணங்கிவந்த பிள்ளைமதியாரியர், திடுமென முழுமுதற் கடவுட்கொள்கையும் மெய்ப்பொருள் முதறிவுங் கொண்டாரெனின், குப்புறக் கவிழாத குழவி குதித்தெழுந்தோடின தென்பதொக்கு மன்றே!

"பாட்டுரை நூலே **வாய்மொழி** பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்." செய்–78
"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே **மந்திரம்** என்ப." செ–176

என்று தொல்காப்பியங் கூறுவதால், உபநிடதங்கட்கு மூலமான தமிழ் நூல்களெல்லாம் அழிக்கப்பட்டு விட்டன என அறிக. மேலும், உப—நி—ஸத் என்று பிரியும் உபநிஷத் என்னும் கூட்டுச் சொல்லின் முதன்மையான உறுப்பாகிய ஸத் என்பது, குந்து என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபே.

www.thamizham.net - Free E book No 7415

குத்து–குந்து–ME Squat, L. Sed; OE, OS Sit, Skt Sad.

இனி, "அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறுது
ப:றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்.
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி."

என்னும் சிலப்பதிகார அடிகள் (மதுரைக். 11: 17-22), பனிமலை கடலுக்குள்ளிருந்து எழுவதற்கும் முந்திய தொன்முது பண்டைக் காலத்திற்கு நம்மைக் கொண்டுபோய் விடவில்லையா?

இம்மாதம் ௪௦-ஆம் பக்கல், முற்காட்டிய விளம்பரப்படி, மயிலைச் சீநிவாச சாத்திரி மண்டபத்தில், 'தமிழ்நாட்டுப் பெற்றோர் கழக'த்தின் கூட்டம் மேனாள் சென்னைத் தலைமைத் தீர்ப்பாளர் பா். பி. வி. இராச மன்னார் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் பெயர் 'தமிழ்நாட்டுப் பெற்றோர் கழகம்' என்றிருப்பினும், உண்மையில் அது தமிழ் நாட்டுப் பிராமணப் பெற்றோர் கழகமே. தமிழறியாத தெலுங்கரான இராசமன்னாரும் தமிழ் வரலாற்றறிவும் மொழி நூலறிவுமில்லாத திரு. ம. பொ. சி. யும் இவர்போன்ற இரண்டொருவரும் கலந்துகொண்டதினால், அது தமிழ்நாட்டுப் பெற்றோரனைவரையும் படிநிகர்க்கும் கழகம் ஆகிவிடாது.

மொழிவாரிப் பைதிர (பிரதேச)ப் பிரிப்பின்பின், தமிழ் நாட்டைப் பழஞ்சென்னைக் கூட்டுநாடு போன்றே கருதிக்கொண்டு, தமிழறியோ தமிழ்ப்பற்றோ இல்லாத தெலுங்கர் தமிழுக்கு மாறான கூட்டங்களிற் கலந்துகொள்வதோடு, தமிழுக்குந் தமிழர்க்குங் கேடு விளைக்கும் கருத்துக்களை வெளியிடுவதும், தீர்மானங்களை நிறைவேற்றுவதும் தகாத செயல்களாம். பா். இராசமன்னார் தெலுங்கு நாட்டிலோ தமிழ் நாடு தழுவாத இந்தியாவிலோ சமற்கிருதத்தைக் கட்டாயப் பாட மாக்க முயற்சி செய்யின், அதிற் குற்றமொன்றில்லை. ஆயின், தமிழைத் தெலுங்குபோற் கருதிக்கொண்டு, இக்காலத்திலும் தமிழ்நாட்டு மொழித்துறைச் செய்தியில் அவர் ஈடுபடுவது மிகமிகக் கண்டிக்கப் படத்தக்கதாம். சமற்கிருதம் சேரச்சேர தெலுங்கு உயருமென்றும் அது தீரத்தீரத் தமிழ் உயருமென்றும், அவர் வேறுபாடறிதல் வேண்டும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆரியம் இன்னும் வேரூன்றி

www.thamizham.net - Free E book No 7415

யிருப்பதனாலும், சென்னைப்பல்கலைக்கழகத் துணைக் கண்காணகராகப் பர். இலக்குமணசாமி அவர்களை இறுதியாகத் தேர்ந்தெடுத்தற்கு அமைக்கப்பட்ட குழுவுறுப்பினர் மூவரும் தெலுங்கராயிருந்ததற்கு ஓர் எதிர்ப்பும் இன்மையாலும், பழைய நாள்போன்றே தமிழ்நாட்டு நிலைமை என்றுமிருக்குமென்று கருதுகின்றனர் போலும்! கோவைப் புதுப்புனைவாளர் (Inventor) திரு. கோ. துரைசாமி அவர்களும் (ஜி. டி. நாயுடு) காலஞ்சென்ற பர். வரதராசலு அவர்களும் போன்றவரே தமிழ்நாட்டு மொழித்துறையிலும் ஆட்சித்துறையிலும் தமிழர் போன்றே ஈடுபடமுடியும். பால்போல் இயல்பாகவுள்ள தமிழ்வேறு; தயிர்போல் திரிந்துள்ள திரவிடம் வேறு என அறிக.

கழகத் தலைவர் திரு. கே பாலசுப்பிரமணிய ஐயர், சமற்கிருத எதிர்கால நிலையைப்பற்றித் திரு. அண்ணாதுரையைத் தாம் வினவிய போது, "அஞ்சற்க! எல்லா ஏந்துகளும் (வசதிகளும்) உங்கட்குத் தரப்படும்." என்று அவர் விடையிறுத்ததாகக் கூட்டத்திற் கூறியுள்ளார். திரு. அண்ணாதுரையார் தமிழுக்கு அதிகாரி யன்மையின், அவர் இங்ஙனம் உடலோடிருந்திருப்பினும், அவர் கூற்றுச் செல்லாதென உணர்க.

தமிழ்நாட்டுத் தி. மு. க. அரசிற்கு அறிவுரை.

இற்றை யாளுங்கட்சி தன்னுரிமை(சுதந்தரா)க் கட்சியையும் கூட்டணி யுறுப்பாகக் கொண்டிருப்பதாலும், திரு. அண்ணாதுரை போன்ற ஆற்றலாளர் இன்று தி. மு. க வில் இல்லாமையாலும், தி மு க. த் தமிழ்ப் புலவர் பலர் நாளும் ஒருவர்க்கேனும் ஆரியத்தை யெதிர்த்துத்தமிழைக்காக்கும் மதுகையின்மையானும், மயிலைத் தமிழ் நாட்டுப் பெற்றோர் கழகச் சார்பில், ஓய்வுபெற்றவரும் பெருதாருமான பெரும்பதவியரும் சாய்கால் மிக்க பெருமக்களும் இற்றை முதலமைச்சர் இளைஞரென் றிகழ்ந்து, சமற்கிருதம் தழுவிய மும்மொழித் திட்டத்தைப் பள்ளிகளிற் புகுத்த முனைவாராயின், பெருந்தலைகளென்றும் அடுத்த பொதுத்தேர்தலில் தாக்குமென்றும் வீணாக அஞ்சி அவருக்கு இணங்கற்க. தி. மு க. ஆட்சிக்கு என்றும் தலையாய அரண் தமிழே என்பதை மறவற்க. ஏற்கெனவே, தி. மு. க. அரசு தமிழைக் காக்கவும் வளர்க்கவும் வாய்த்த சமையங்களையும் வழிகளையும் பயன் படுத்தவில்லை இரண்டாம் உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு தமிழுக்குக் கேடாக நடந்ததைத் தடுக்கவில்லை. தமிழ் வளர்ச்சிக்கு இன்றி

www.thamizham.net - Free E book No 7415

யமையாத சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலித் திருத்தத்தையும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பையும், இன்னும் மேற்கொள்ள வில்லை. இனி சமற்கிருதத்தையும் வலியுறுத்தி இந்திக்கும் வழிவகுப்பின், தமிழ்த்துணை இல்லாது போம் என எச்சரிக்கின்றோம். சட்டப் பொத்தகத்திற் சென்னை நாடென்றிருந்ததைத் தமிழ்நாடென்று மாற்றியதனால் மட்டும் தமிழ் ஒன்றும் வளர்ச்சியடைந்து விடாது. தமிழைப் பற்றிய தெளிவான அறிவோ தமிழ்ப் பற்றோ, தமிழைக் காக்கும் மனத்திண்மையோ இல்லாத தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் புகழ்ந்ததனால்மட்டும் தமிழைக் காவாத குற்றம் நீங்கிவிடாது.

தமிழ் நாட்டுப் பிராமணர்க்கு எச்சரிக்கை.

பிராமணர் பாரதக்காலத்திற்கு முன்பிருந்தே பல்வேறு சமையங்களிற் பல்வேறு கூட்டமாகத் தமிழ்நாடு வந்து குடிபுகுந்திருந்தும், இன்னும் இற்றைப் பிராமணர் நக்கீரரும் பரிதிமாற் கலைஞரும்போல் முழுத்தமிழராகவில்லை. பேச்சுமொழி வேறின்மையின் போக்கற்றுப் போய்த் தமிழைப் பேசுகின்றனரேயன்றி, உண்மையான தாய்மொழிப்பற்று அதனிடம் அவர் வைத்திலர். பண்டைத் தமிழரசர் பேதைமையுங் கொடைமடமும் மதப்பித்தமுங் கொண்டிருந்ததினால், அற்றைப் பிராமணர் தம் வெண்ணிறத்தையும் தம் முன்னோர் மொழியின் முழங்கொலிகளையும் வரையிறந்து பயன்படுத்தி, தம்மை நிலத்தேவரென்றும் தம் முன்னோர் மொழியைத் தேவமொழியென்றும் கூறி ஏமாற்றி அவர் நம்புமாறு செய்துவிட்டனர். இக்காலத்தும் தமிழைக் காட்டிக்கொடுக்கும் கொண்டான்மாரும் வையாபுரிகளும் பேராயக்கட்சித் தலைவரும் ஒருசிலரிருப்பினும், அச்சிறுபான்மையரை நம்பித் தம் முன்னோரின் ஏமாற்றுக் கலையைத் தொடரத் துணிவது வரலாற்றறிவும் மொழியாராய்ச்சியும் பரவெளிச் செலவும் மிக்க இக்காலத்திற்கு எள்ளளவும் ஏற்காதென்றும், அதோடு மிகுந்த ஏதத்தையும் விளைக்குமென்றும் அறிந்து, தமிழரைச் சூத்திரரென்றும் தமிழரசரை அசுரரென்றும் இழித்தும் பழித்தும் தம் முன்னோர் செய்த வழுவாய்க்கெல்லாம் கழுவாய்தேடி, தமிழரொடு உடன்பிறப்பன்பு பூண்டும் தமிழிடம் தாய்மொழிப் பற்றுவைத்தும், உண்மையும் நன்றியறிவும் உள்ளவராக நடந்துகொள்வாராக

அவ்வாறன்றி, இனிமேலும் அரைச்செயற்கை இலக்கிய நடைமொழியாகிய சமற்கிருதத்தை உயர்த்தித் தமிழைத் தாழ்த்த விரும்பு

www.thamizham.net - Free E book No 7415

வாராயின், வருகின்ற கல்வியாண்டுத் தொடக்கத்தில், பள்ளிகளும் கல்லூரிகளும் திறந்தபின், சென்னையில் தக்காரான பெரியார் தலைமையில் சமற்கிருத எதிர்ப்பு மாநாடு நடத்தப்பெறும் என எச்சரிக்கின்றோம். தமிழ்க்கலைச் சொல்லாக்கக் குழுத் தலைவரும் தமிழ்நாட்டு வரலாற்றாசிரியரும் தனித்தமிழ்ப் பற்றுள்ளவராகவே இனியிருத்தல் கூடுமென்றும் தெரிவிக்கின்றோம்.

தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்பதிற் பிராமணர்க்கு ஐயமிருப்பின், 1971-ஆம் ஆண்டு இறுதியில், தில்லி, இலண்டன், பெர்லின், பாரிசு, மாசுக்கோ, நியூயார்க்கு ஆகிய மாநகரங்களுள் ஒன்றில் உலகமேடையில் தருக்க வாயிலாகச் சமற்கிருதத்தின் உயர்வை நாட்டற்கு இன்றிருந்தே வட்டங்கூட்டு வாராக. "மெய் வெல்லும்; பொய் தோற்கும்" நீண்டகாலம் நிலைத்துவிட்டமையால் ஒருபொய் மெய்யாகிவிடாது. இந்திய மொழிகட்கெல்லாம் மூலம் தமிழே யன்றிச் சமற்கிருதமன்று.

சமற்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட வுறவு தாக்குவோனுக்கும் தற்காப்போனுக்கும் இடைப்பட்டது என்று நாங்கள் உணர்வதால், இப்போராட்டத்தை உயிர்நாடி வினையாகவும் இறுதிமுயற்சியாகவுங் கொண்டு, இறைவனருளால் தப்பாது வெற்றிபெற எல்லா வழிகளையுங் கையாளத் திட்டமிட்டுள்ளோம் என்பதையும், தெரிவிக்க விரும்புகின்றோம். தமிழும் ஆங்கிலமுங் கொண்ட இருமொழித் திட்டமே தமிழ்நாட்டிற் கேற்றது. தமிழர் வழிபாடும் சடங்கும் குமரி நாட்டிற்போல் தமிழிலேயே இனி நடைபெறுதல் வேண்டும்.

சமற்கிருதம் தேவமொழி யென்னும் பழைய ஏமாற்று இனி ஒரு நொடியுஞ் செல்லாது. அது தேவமொழியாயின் தேவருலகிற்கே சென்றுவிடல் வேண்டும். இது மக்களுலகமாதலின் இங்கு மக்கள் மொழியாகிய தமிழே தலைமையாக வழங்குதல் வேண்டும்.

உலகத் தமிழ்க் கழகம், தமிழ்நாடு.
உக, மேழம் 2000 (3-5-1969).

அறிவிப்பு.

பல்வேறு ஊர்களிலும் உள்ள உ. த. க. கிளைகள் தங்கள் ஏந்துகட்கு ஏற்ப இக்கட்டுரையினை அச்சிட்டுப் பொதுமக்கட்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுச்செயலாளர், உலகத் தமிழ்க்கழகம்.

www.thamizham.net - Free E book No 7415

"பார்ப்பான்"—
சொற்பொருள் ஆய்வு.

புலவர். சரவணத்தமிழன்.

இச்சொற்குப் 'பொத்தகம் பார்ப்பான்' என ஆசிரியப் பொருள் படவும் 'மேற்பார்ப்பான்' என அமைச்சுப் பொருள்படவும் உரைப்பாராய் அறிஞர் பலசாரார். நச்சினார்க்கினியர் முதற் கருத்துடையாரே என்பது காட்டுதும். அந்தணரும் பார்ப்பாரும் ஒருவரே என முறைப்படிகோடலும், அதற்கேற்ப 'அந்தணராவார் வேதஅந்தத்தை அணவுவார்' எனப்பிரித்து 'மறை இறுதியையே பொருளாக் கொண்டு எக்காலமும் பார்ப்பார் (மதுரைக் காஞ்சி 474, கலி 1–1) என விரிக்கும் அவருரையிற் பரவிக்காண்க.

அந்த + அண் + அர் என நின்று முதனிலை ஈறுகெட்டுப் புணர்தலே அவர்க்குக் கருத்தாயிற்றன்றோ? இத்திரிபுப் புணர்ச்சியல் அண்ணுதல் பார்த்தற் பொருள் படுமாறுரைத்தார்; அதற்கு அப்பொருள் இன்மையானும், அவரே 'கானல் அணிந்த உயர் மணல் எக்கர்மேல்' (கலி–நெய்–16–2) என்புழி இவ்வேரை உய்த்துணர்ந்து 'இட்ட' என்றுரைத்தலானும் அஃதாமாறென்? மற்று அண்ணுதற்குப் 'பார்' என்னும் முதனிலைக்குத் தக்காங்கு பொருளுரைத்தார்—பார்த்தல் என்பது பண்டையில் இக்கால் வழக்குப்போல ஓதல் அல்லது பயிறல் என்னும் பொருளுருமை அறிந்தும் உரைத்தமை என்னே? அவர் அறிந்தமை—ஒரோவழி 'நோக்குவார்' (முருகு 96) என மாற்றி உரைத்தமையானும் அறிக! நோக்குதல்தான் அப்பொருட்டோஎனின்-அன்று; எனினும்–'பிறன்மனை 'நோக்காத' பேராண்மை (குறள்-158) என்றவிடத்துப் பரிமேலழகியார் கருத்தொப்ப, 'குறிபார்த்து'–(கலி–10–12) என்றுழி 'மனத்தால் நோக்கி' என்றுதான் உரைத்ததனை நோக்கி ஈண்டும் கூறினார் போலும்.

ஏனை,

அயிரை பரந்த அந்தண் பழனத்து (குறு–178) என்றும்,

அந்தண் பொய்கை எந்தை எல்லூர் (குறு–354) என்றும்,

அந்தண் கிடங்கிளவன் ஆமூர் எய்தின் (சிறுபாண்–188) என்னும் குளிர்நீர்மைப்பொருட்கு அந்தண்என்னும் சொல்மிக்குப்பயின்றுவரலானும் இஃது அருட்கு ஒத்தலானும்,–அந்தணாளர் (புறம்–126)

www.thamizham.net - Free E book No 7415

'அந்தணாளிர்' (புறம்-262 என்னும் சொல் வழக்குண்மைய னும், 'அந்தணீர்' (கலி-8) என்பது அருவீற்று விளிமரபுக்கு (தொல் சொல்—இளம் 135) இயைதலானும், 'அந்தண்மைபூண்ட அருமறை —(திருமந்திரம்-அந்தணர் ஒழுக்கம்—11), அந்தண் மறை வேள்வி— —(திருப்புகழ்) என அந்தண் என்பது பண்பாதலும், அவை மறைக்கு அடையாதலும் உடைமையானும், அந்தணர் அருள்முதலுடைய துற வறத்தராயே இலக்கியத்துத்தோற்றலானும், பரிமேல் அழகியார்க்கும் (குறள்—3—10) இஃதே கருத்தாகலானும் அந்தணர் என்னும் சொல் அந்தண் + அர் என்று பிரிப்புற்று அருளுடையார் எனற்பாலதே சொற்கருத்தாதல் உணர்க!

'கற்றல்' என்னும் தொழிற்பெயர் அளவாய் 'கற்பு' என்பதனை ஓதியாங்கு (தொல்—சொல்—சேனவரையர் வைப்பு—72) பார்த்தல் என் னும் பொருட்டாகவே பார்ப்பு எனப் பிரியாமோ எனின்—பார்வல், பார்வை என்றல்லது இவ்வழக்கின்மையான் அந்நூற்பாவினே 'நோக்கலின்' எனப் பண்டை வழக்குப்பற்றி வாய்பாடோதலின் சொல்வழுவும், காலந்தவிர மேற்பொருட்டே ஆதலின் பொருள் வழு வும் எய்தலின் எய்தாதென்பது. நோக்கலின்' என்பது உள்ளக்காட்சி பற்றியது என்று கோடும் எனின்.

கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே (குறு—44) என்றற் றொடக்கத்து இலக்கியமும், பாவியத்தில் 'நோக்கல் நோக்கம் 'என் புழி முதல் நோக்கு கட்புலன் சுட்டலின் கண்ணோட்டம் போலப் பின்னரே உள்ளநிகழ்ச்சிக்காதலும் உடைமையின் சால்பாகாதென்பது 'பார்ப்பான்' என்பதனை வினைச்சொல்லாகவே வலிப்பின் எதிர்காலம் உணர்த்தலானும் அது பொருளன்மை அறிக! இம் மயக்குறுமாக லினன்றே பார்ப்பான். பார்ப்பனி என்னும் பண்டைய வழக்கின பார்ப்பனன், பார்ப்பனத்தி எனப்பின்னர் சாரியைபெற்று வழங்கல் மேயின. பார்ப்பார்க்கு இருபிறப்புக் கடைப்பிடி தொல் வழக்காதலா னும், தொல்காப்பியத்தில் 'நூலே கரகம்' என்று இவர்க்குக் கருவி கூறலானும், இலக்கிய வழக்குண்மையானும் இருபிறப்புப் பற்றிய பெயரீ டிஃது என்றலில் இழுக்கின்மையும் முரணின்மையும் அறிக!

புலனழுக் கற்ற அந்தணாளன் (புறம்-126) என்று கூறுகையிலும் அந்த(ெ)ணன் புலவன் கொண்டுவந் தனெனே (புறம்-201) எனத் தன்மையிலும் கபிலர் கூறப்படுதல் ஆரியப் பார்ப்பனர் பொருட்டில் அன்று என்று கபிலர் நூலுடையார் ஒருவர் (வேங்கடராசு—11) கூற்

www.thamizham.net - Free E book No 7415

ருனும் முற்கால் அந்தணர் என்னும் வழக்கு தனித்தமிழ்ச் சான்றோரைச் சுட்டியதூஉம், பின் அஃது சமயக் குப்பையை மேற்கொண்டு புக்க ஆரியர்க்கு வழங்கியதூஉம் வற்புறல் காண்க. பார்ப்பாரை அந்தணர் என்று அகப்படக்கூறியமையினன்றே நூல்முதல 'அந்தணர்க் குரிய' (தொல்-பொருள்-615 என்றும் அந்தணர் மறைய (தொல்-எழுத்து-102) என்றும் தொல்காப்பியம் நூற்றது. 'அந்தணர் என்போர் அறவோர்' (குறள்-3-10) என்புகழி 'இஃது ஏதுப்பெயர்; ஆகலின் அருள் உடையார் மேலன்றிச் செல்லாது' என மறைக்குறிப்புபட உரைத்த பரிமேலகியார் 'மறப்பினும் ஒத்து கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும் (குறள்-14-4) என்ற விடத்து 'அந்தணன்' என்ற பொருள் கொண்டதும் இதுபற்றியே என்க.

இருபிறப்பாளர் என்னும் சொல்வழக்கு எட்டுத்தொகைக்கண் பரிபாடலில்—

'இருபிறப்பிருபெயர் ஈரநெஞ்சத் தொருபெயர் அந்தணர் அறன் அமர்ந்தோயே' (14–27–28) என்றும், இழிபிறப்பாளன் கருங்கைக் கொல்லன்' என்று (190) ஒத்தியல் சொல்பயிலும் புறத்தில் 'ஒன்று புரிந்தடங்கிய இருபிறப்பாளர்' (புறம்-367-12) என்றும், பத்துப்பாட்டின்கண் முருகாற்றுப்படையில் 'முத்தீச் செல்வத்து இருபிறப்பாளர்' (181-182) என்றும், சிலம்பில், 'ஒன்றுபுரி கொள்கை இருபிறப்பாளரும்' (23-காதை) என்றும் கூறப்படுதலின் மேன்முடிபே முடிவாதல் காண்க.

'மேற்பார்ப்பார்' என்று கூறுவாரால் எனின் குமுகாயவியல் ஒன்றே நோக்கிக் கூறும் அவரும் பண்டைத் தமிழ் அரசியலில் பார்ப்பன அமைச்சர் இன்மையை அறியாமை யுடையவராய்ப் பிறழ் வுணர்வுற்றமையே என்க! பிராமணர் என்பதே இஃதாய்த் திரிந்த தென்பார் ஆரியர் என்பதே ஐயர் எனத் திரிந்ததென்றுரைப்பாரோடொப்பர்; என்னை, ஐம்மை உடையாரே ஐயர் என்பது வெளிப்படையாகலான்.

உரையாசிரியர் பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி என்றிவற்றைக் குற்றியலுகரப் புணர்ச்சியில் (தொல்-429) கூறலானும், விளிமரபில் (சொல்-இனம்-135) ஆருவும் அருவும் ஈரொடுசிவணுமாற்றிற்குப் பார்ப்பார் பார்ப்பீர் என்பதனைக் காட்டலானும், சேனாவரையர்

www.thamizham.net - Free E book No 7415

உடம்பட்டுக் கொள்ளலானும் நச்சரும் வழிமொழிதலானும் பார்ப்பு என்பதே முதனிலை என நிறுவியவாறு.

இத்துணையும் எய்தியார் உளராதல் செவிபுறலின் (மு. இராகவ வையங்கார்) நம்வழி நேரிதாதலும், அவர் தாமும் பார்ப்பைப்பறவைக் குஞ்செனக் கொண்டும், பறவை காத்தாங்குப் பிறதொழில் செல்லாது காத்தற்குரியர் என்றது இலக்கியம் இன்றியும் இயையின்றியும் 'அந்தணாளர்க்கு அரைசுவரை வின்றே' (தொல்–பொருள்) என்னும் முதநூலானே மாறுகலானும் நேரிதாகாமையும் அறிந்துகொள்க.

மற்று, 'பல், முட்டை பார்ப்பனர்' இருபிறப்பின என்றல் வடமொழி சொற்றொகை வழக்கென்பது கேள்வி· 'பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை' (தொல்-பொருள்-இளம்-584) என்பது காப்பிய மரபு. இவற்றான் பார்ப்பு என்னும் சொல் முறையே முட்டைப் பிறப்பினவற்றிற்கும், அஃதொத்து இரட்டைப் பிறப்பினராய் பார்ப்பனர்க்கும் வழங்கலுடைத்தாயின என்பது புலனும். இம்மூன்றும் ஒன்றொன்றற்கு உருவகமாய் விராய் வருதல் வடநூற் பண்பு.

பார்ப்பு என்பதின் அடியாக 'பாப்பாத்தி' எனத் தோன்றும் சொல்லே தமிழ்ப்பெண்டிர்க்குக்'குழந்தையம்மை' என்னும் பொருளில் வழங்குதலும் 'திவழ்பவை தாமும் அவற்றோரன்ன' (தொல்-பொருள் 549) என்னும் காப்பிய நூற்பாவின் கருவானன்றோ! ஆகலின் இச்சொல்தன்மை நோக்கி வழக்குடைத்தாதல் தேறுதிர். அஃறிணைப் பெயர் உயர்திணைக்காதல் பிள்ளை, குட்டி என்பனவற்றின் பரவிய ஆட்சியான் அறிக!

பார்ப்போடியைந்த பிள்ளையும் இருபிறப்பாளர்க்கு ஆதல் வேண்டுமெனின்–அவ்வாறே பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை, தூப்புல்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை போன்ற வழக்கான் முறைசிதையாமைக் கண்டு கொளீஇயர். அன்றியும், பிள்ளைப்பெயர் பயிலுமிடத்தெல்லாம் பார்ப்பு புகாமைப் போலும் மரபாயிற்று எனலும் ஒன்று. இதனானே, அந்தணர் என்பது பழந்தமிழ்ச் சான்றோரைச் சுட்டியதூஉம், பின்றை வந்தேறிய ஆரியர்க்கு ஆயதூஉம், பார்ப்பனர் என்னும் பெயர் வழக்கு 'இருபிறப்பு'க் கொள்கையராய புதுத்தன்மை கொண்டு இயன்றதூஉம் காட்டப்பட்டன. O

www.thamizham.net - Free E book No 7415

தொடரோவியம் தொலைபேசி

-செங்குட்டுவன்.

காட்சி-6

இடம்: பெல்லின் அறை

உள்ளோர்: பெல், மேபெல்

காலம்: தி. பி. 1906 விடைத்திங்கள் 20-ஆம் நாள் மாலை

பெல்: (மேபெல்லை நோக்கி) என் உள்ளத்தில் நீக்கமற நிறைந்துள்ள மேபெல்லே! என் அன்பே! என் திறமையால் உனக்கு நம்பிக்கையில்லையா? ஏன் மலங்க மலங்க விழிக்கிறாய்? உன் விழியழகு உன் ஏனைய குறைபாடுகளையெல்லாம் நீக்கிவிடுகின்றதே! நான் என்ன கூறுகிறேன் என்று நீ கேட்க முடியவில்லை! உன் உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை எனக்கு வாய் திறந்து கூறமுடியவில்லை! உன்னை எவ்வாறாயினும் பேசுமாறும் கேட்குமாறும் செய்வேன். இருப்பினும் நமது உணர்வுகளுக்கு வாயும் செவியும் வழிகளா? இல்லையில்லை!

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்ற முதுமொழியின் மெய்ப்பொருளனைத்தையும் உன்னைக் காணுகையில் அறிகிறேன். என் கண்ணிற் கருமணியே! செவியையும் வாயையும் ஈடுசெய்யும் உன் குவளைக்கண்கள் என் உள்ளத்துணர்வுகளைப் புரிந்துகொண்டு உன் உள்ளத்துணர்வுகளை எனக்குத் தெரிவிக்கின்றனவன்றோ! இன்று நீ பேசவும் கேட்கவும் இயலாத நிலையில் இருக்கலாம். ஆனால் உன்னால், இந்த உலகத்தில் கேட்க இயலாத மிகத் தொலைவில் உள்ளவர்களும் ஒருவரோடு ஒருவர் நேரில் உரையாடுவதைப் போல் பேசும் காலம் வரும். அதற்கு முழுமுதற் கரணியம் நீதான். நீ என் அரிய அன்பர் அப்பர்டுவின் மகள் என்பதற்காக மட்டும்

www.thamizham.net - Free E book No 7415

இப்பொழுது இந்த முயற்சியில் ஈடுபடவில்லை யென்பதை யும் என் ஆராவேட்கையையும் நீ அறிவாய். வருந்தாதே!

(வாட்சன் வருவதைக் கண்டு) சரி நேரமாயிற்று. இக் கருவி களைச் சிறிது நேரம் பார்த்த பின்னர் நீ வீட்டுக்குப் புறப்படலாம்

(சைகை மூலம் காட்டுகிறார்)

கருவிகளின் இயக்கம்: டப்...டப்...டொக்...டப்...டொக்...சர்ர் சர்...டப்...டர்ர்...டர்ர்...டப்

பெல். வாட்சன்! அந்தக் கருவியை நான் கூறியவாறு சரி செய்து விட்டாயா?

வாட்சன்: இப்பொழுதுதான் சரிசெய்து முடித்தேன். திருவாளர் அப்பர்டு வருவதுபோல் தோன்றுகிறது.

அப்பர்டு: (வந்துகொண்டே) பேராசிரியருக்கும் வாட்சனுக்கும் என் வணக்கங்கள்.

பெல்லும், வாட்சனும்: வணக்கம்... வணக்கம். அமருங்கள்.

அப்பர்டு: மேபெல்லிடம் ஏதாவது முன்னேற்றம் தென்படு கிறதா?

பெல்: இதுவரை ஏதும் இல்லை. எனினும் தாங்கள் கவலைப்பட வேண்டா. அவளைப் பேசவைக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொண்டு விட்டேனே! இன்று ஒரு முக்கியமான நிகழ்ச்சியைப் பற்றித் தங்களி டம் கூற விரும்புகிறேன்.

அப்பர்டு: தாராளமாகக் கூறுங்கள்.

பெல்: ஓரிடத்தில் ஒருவர் பேசுவதைப் பிறிதோரிடத்தில் வேறொருவர் கேட்கும் கருவியொன்றைச் செய்ய முடியும் என்று கண்டுகொண்டேன்.

அப்பர்டு: (அதிர்ச்சி மிக்க வியப்புடன்) என்ன! கனவிற்காணும் கானல் நீரைப் பருக இயலுமென்று கூறுகிறீர்கள்? இது மெய்ம்மைதானா?

பெல்: தற்போது அத்தகைய கருவியொன்றைச் செய்து முடிக்க வில்லை யென்றாலும் ஒலியதிர்வைக் காட்டும் கருவியொன் றைக் கண்டுபிடித்துள்ளேன். இக்கருவி பேசுவதைப்

www.thamizham.net - Free E book No 7415

போல் பேசாவிடினும், பாடுவதைப்போல் பாடாவிடினும் நாம் ஒரு முனையில் ஊட்டும் அதிர்வுகளை மறுமுனையில் தெளிவாக உண்டாக்குகின்றது. இதற்கு எவ்வகை மின் சாரமும் தேவையில்லை யென்பது வியப்பானதொன்றாகும். இதனைச் சீர்திருத்தினால் பேசுவதை ஒலிக்கும் கருவியை அமைக்கலாம்.

அப்பர்டு: நல்லது பெல் அவர்களே! முயன்று கருவியை அமைத்தவுடன் எனக்குத் தெரிவியுங்கள் உடனே உரிமைப் பதிவு செய்ய வேண்டுமல்லவா?

பெல்: அவ்வாறே தெரிவிக்கிறேன்.

அப்பர்டு. மேபெல் தங்கள் கருவியைப் பார்த்தாளா?

பெல்: ஆமாம்.

அப்பர்டு: இவளுக்கு இன்று பாடமெல்லாம் முடிந்து விட்டதா?

பெல்! முடிந்து விட்டது. தாங்கள் அழைத்துச் செல்லலாம்! (மேபெல்லின் பக்கம் திரும்பி) என்ன மேபெல்! சென்று வருகிறாயா?

அப்பர்டு: சென்று வருகிறோம்.

(அப்பர்டுவும் மேபெல்லும் செல்லக் காட்சி முடிவு)

காட்சி-7

இடம்: பெல்லின் ஆய்வக அறைகள்.

உள்ளோர்: பெல், வாட்சன்.

காலம்: தி பி. 1907, சுறவ மாதத்தில் ஒரு நாள்.

பெல்: வாட்சன், இந்நாள் வரை நாம் செய்த முயற்சிகள் வீண் போகா. இன்று நாம் செய்துள்ள கருவி நமக்கு வெற்றியை அளிக்கலாம். ஆய்வைத் தொடங்கலாமா?

வாட்சன்: தொடங்கலாம், தலைவரே!

பெல்: சரி, உன்னுடைய அறையிலுள்ள செவிப்பானில் காதை இருத்து. நான் என் அறையிலுள்ள கருவியின் மூலம் பேசிப்பார்க்கிறேன்.

வாட்சன்; அவ்வாறே செய்கிறேன்.

(இருவரும் தத்தம் அறைகளுக்குட் சென்று கருவியின் முன் அமர்கிறார்கள்)

(தொடர்ச்சி 51-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7415

குறிநேர இயக்கி (TIME SWITCH)

-நாஞ்சில் அன்புச் செழியன் (தியாகராசர் பொறியியற் கல்லூரி)

வானொலிப் பெட்டி, மின்விளக்கு, மின்விசிறி போன்ற எந்த மின்னிணைப் பொருட்களையும் நாம் விரும்புகின்ற நேரத்திற்கு இயக்குவிக்க முடியும் என்பதனை இக்கட்டுரை மூலம் படித்தபின், பொறியியலர் மட்டுமல்லாது மற்ற தமிழன்பர்களும் இதனைச் செய்து தங்கள் இல்லங்களில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இக் கட்டுரையினை வரைகின்றேன்.

'குறிநேர இயக்கி' என்பது குறித்த நேரத்தில் மின்விசையை மின்னிணைப் பொருளுக்குத் தருகின்ற ஓர் அமைப்பேயாகும். எடுத்துக்காட்டாக ஒரு வானொலிப் பெட்டியில் மாலை 5-மணிக்குமேல் திருச்சி ஒலிபரப்பைக் கேட்க வேண்டுமென்றால், முன்னதாகவே (கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் காணப்படும்) மணியின் எச்சரிக்கை ஒலி முள்ளை (alarm pointer) '5' குறிக்கும் படியும், வானொலிப்பெட்டியில் திருச்சி நிலையத்திற்குரிய அலைஎண்ணை எண்முள் (meter indicator) காட்டும்படி அலைமாற்றுத் திருகினைச் (Tuning Knob) சுற்றியும் தேவையான அளவு ஒலி எழுப்பப்படும் வகையில் ஒலித் திருகினைச் (Volume Control Knob) சுற்றியும் வைக்க, மாலை மணி ஐந்தானதும், மணியோசை கேட்கும்; இனிய இசை வானொலிப் பெட்டியிலிருந்து எழுப்பப்படும். (இதைப்போன்று வானொலிப் பெட்டியினைக் குறித்த நேரம்வரை இயங்கச் செய்விக்கவும் முடியும். அதற்குரிய விளக்கம் இங்குத் தரப்படவில்லை.) குறிநேர இயக்கியின் செய்முறை பற்றியும், இயங்குமுறை பற்றியும் காண்போம்.

'குறிநேர இயக்கி' செய்யத் தேவையானவை:-

(க) ஒலி எழுப்பும் மணிப்பொறி (alarm time piece)
(உ) 12" × 8" × 5" மரப்பெட்டி
(ங) அஞ்சல் (Relay)
(ச) ஆறு மின்அழுத்தம் தரும் மின்கலம் (6 Volt dry cell)
(ரு) 3" நீளமுள்ள இரண்டு மாழை (உலோக)த் தகடுகள்.
(சு) 3" நீளமுள்ள ஒரு மாழைக்கம்பி.
(எ) இரு தொளை மின் கூடு (two pin socket)
(அ) இரு முனை மின் செருகு (two pin plug)
(கூ) 2"×1"×1" அளவுள்ள ஒரு மரக்கட்டை.

www.thamizham.net - Free E book No 7415



(வரைபடம் ஒன்று)

வரைபடம் ஒன்றில் காட்டியபடி இணைப்புக் கொடுக்க. பெட்டியின் மேற்புறத்தில் மணிமுன் பகுதியிலும், '2.த என்ற மாழைத்தகடுகள் பொருத்தப்பட்ட மரக்கட்டை பின்பகுதியிலும், ஒன்றையொன்று ஒட்டினாற்போல் இருத்தல் வேண்டும். மணி உறுதியாகப் பெட்டியுடன் இணைக்கப்பட வேண்டும். 2.க' என்ற மாழை உலோக க் கம்பி சுழலும் மணியின் ஒலித் திருகினுடன் உறுதியாகப் பற்றுவைக்கப்பட வேண்டும். மாழை (உலோக)க் கம்பியின் நீளம், கம்பி மாழைத் தகடுகளைத் தொடும்போது ஒன்றுடன் ஒன்று இணையும்படி இருத்தல் வேண்டும். மாழை (உலோக)க் கம்பி காப்பிடப் பட்டிருத்தல் (insulated) வேண்டும்.

இயங்கு முறையும் விளக்கமும்:-

வரைபடம் இரண்டைப் பார்க்க. மின்சுற்றுப் படம் (Electric Circuit diagram) இதில் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.



படம் இரண்டு

'அஞ்சல்' (Relay) என்பது ஆறு மின் அழுத்தத்தில் வேலை செய்யும் ஒரு மின் இயக்கி. இது நான்கு முனைகளைக் (Terminals) கொண்டது. 1, 2 ஆகிய இருமுனைகளுக்கிடையில் ஒரு கம்பிச்சுற்று (coil) (சு) இருக்கும். அதனூடே ஒரு மெல்லிரும்புத் தண்டிருக்கும்.

(த). 3 4 ஆகிய முனைகள் இரு கம்பிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் கம்பிச் சுற்றிற்கு மின்அழுத்தம் கொடுக்கப்பட்டால், அது திறன் பெற்று மெல்லிரும்புத் தண்டை மின்காந்தமாக்கும். அத்தண்டு உடனே 3, 4 என்ற முனைகளை ஒன்று சேர்த்துவிடும். 3, 4 முனைகள் ஒன்று சேர்க்கப்பட்டால் வானொலிப் பெட்டிக்கு மின் அழுத்தம் 'கூ' என்ற இருமுனை மின் கூடுவழி கிடைக்கப் பெறும்.

எனவே சார்பு இயக்கி என்ற அஞ்சலை இயங்குவிக்கச் செய்ய வேண்டுமெனில் '2.த' என்ற மாழை (உலோக)த் தகடுகள் (மின் கடத்திகள்) இணைக்கப்பட வேண்டும். இத் தகடு எப்பொழுது ஒன்று சேர்க்கப்படுகிறதோ, அப்பொழுது அஞ்சல் வேலை செய்து மின்திறனை மின் கூட்டிற்கு அனுப்புகிறது. மாழைத் தகடுகளை இணைக்கக் காப்பிடப்பட்ட மாழைக் கம்பினைப் பயன் படுத்துகிறோம். எந்த நேரத்திற்கு எச்சரிக்கை ஒலி எழுப்பத் திருகினைச் சுற்றியிருப்போமோ அந்த நேரத்தில் ஒலி எழுப்புவதுடன் திருகு சுற்றும்; அதனுடன் மாழைக் கம்பியும் சுற்றும்; தகடுகள் இணைக்கப்படும். பல தொலை மின் கூட்டைப் பயன்படுத்திப் பல மின் கருவிகளை ஒரே நேரத்தில் இயங்குவிக்க முடியும். O

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50காசு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

---

www.thamizham.net - Free E book No 7415

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

ஓர் ஆய்வுக் கட்டுரை:

தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்

"THE OLD TAMIL SCRIPTS AND ITS REFORMED NEW SOUNDS"

பேராசிரியர்: மு. உலகநாதன்.

தமிழ் வரிவடிவிலேயே காணுதல் வேண்டும்: தமிழன் உகர ஓசையை உடைய எழுத்துகளை வேறுமொழிக்குரிய குறியீடுகள் இல்லாமலும் தமிழ்க் குறியீடுகளை வைத்துமே சீர்திருத்தம் செய்வது சாலச்சிறந்தது. அவ்வாறு செய்யும் போதே பல்வேறு வரிவடிவங்கள் தோன்றுதவாறு பார்த்துக் கொள்ளல்வேண்டும். இவ்வெண்ணம் ஏன் தமிழ் அறிஞர்களிடத்துத் தோன்றமல் போனது? ஆளுக்கொரு வகையில் கருத்துகளைச் சொல்லிக்கொண்டு போனல் தமிழ்மொழியின் நிலை என்னவது?

ஒரு நூற்றண்டு: இன்னும் ஒரு நூற்றண்டுக்குப்பின் வரும் மக்கள் வடமொழியில் இருந்துதான் தமிழ் தோன்றினது என்று கூறுவதற்கு இக்கடன் வாங்கல் இன்றே வித்தூன்றப்படுகின்றது. என்பதில் மாறுபாடு கொள்ள முடியுமோ? தாளிகை ஆசிரியர்களோ, எழுத்தாளர்களோ வேறுபாடு கருதாமல் ு, ூ என்று குறியீடுகளைத் தங்கள் கதைகளிலும், கட்டுரைகளிலும் எழுதுவதால் மட்டும் அதைத் தமிழ் உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவைஇல்லை என்பதை நினைவுகூர்தல் வேண்டும்.

திரு. ஞானசம்பந்தன்: அடுத்து திருவாளர் த. ஞானசம்பந்தன் பி. இ. அவர்கள், மதுரைப் பல்தொழில் நுட்பக் கல்லூரியின் (Tamil Nad Politechnic) முதல்வராவர். இவரும் தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் தேவை என்று தாமறிந்த சில கண்டுபிடிப்புகளைத் தமது கல்லூரி ஆண்டு மலரில் வெளியிட்டுள்ளார். "The Existing Tamil Scripts and its need for elaboration" என்பதே அவர் தம் கட்டுரையின் தலைப்பு. இவரும் திருவாளர் புலவர் குழந்தையவர்களைப் போலவே உயிர்எழுத்துகள் பன்னிரண்டையும் புதியவடிவில் ஆங்கில எழுத்துகளின் சாயலாக்கிக் காட்டுகிருர். புலவர் குழந்தை அவர்களா

Tamil Nad politechnic Souvenir 1967.

www.thamizham.net - Free E book No 7415

வது உயிர் எழுத்துகளில் உள்ள, அ, அா என்ற இரண்டு பழைய வரிவடிவங்களைச் சிறிது மாற்றத்தோடு சேர்த்துக்கொண்டார் திருவாளர் ஞானசம்பந்தன் அவர்களோ பழைய உயிரின் வரிவடிவம் பன்னிரண்டையுமே மாற்றிவிட்டார். தமிழ் எழுத்துகளின் உயிர் உயிரெழுத்துகள்.

அவற்றை வைத்துக்கொண்டு மற்றைய எழுத்துகளில் மாற்றம் செய்து தமிழுக்குப் பெருமை சேர்ப்பதே தமிழ்மொழிக்கு ஆக்கமும், வளமையும் சேர்ப்பதாக இருக்கமுடியும். உயிரை யாராவது சிதைக்க முற்படலாமா? அதை விடுத்து உயிர் எழுத்துகள் பன்னிரண்டுமே விலக்கப்படுவதும் புதிய வடிவு பெறுவதும் உயிருக்கே உலைவைப்பது போலாகவே முடியும் என்பதில் ஐயமில்லை.

திருவாளர் ஞானசம்பந்தன் அவர்கள், ∴ அ ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,

என்பவற்றைப் பெரும்பாலும் ஆங்கில எழுத்துகளான T. P. J. என்பனவற்றை மாற்றியும் புரட்டியும் தலைகீழாக்கியும் காட்டி அவற்றைத் தமிழின் உயிர் வரிவடிவங்கள் பன்னிரண்டாகக் காட்டுகிறார். மற்றபடி திருவாளர் குழந்தை அவர்கள் காட்டியது போன்றே இவற்றையும் உயிர்மெய் யெழுத்துகளாகிய க, ச, த, ப என்ற எழுத்துக்குப் பக்கத்தில் போட்டுக் கொண்டால் கி, கு, கெ, கை என்பன போன்ற எழுத்துகள் க), கρ, கl, கJ என்ற வரிவடிவங்களாக மாறுகின்றன. தட்டெழுத்துப் பொறிக்கும், அமைப்புக்கும் வார்ப்பச்சுக்கும் பொருந்தி வரக்கூடிய கண்டுபிடிப்புத்தான்; மறுக்கவில்லை.

விளைவு. ஆனால் இதன் விளைவு என்ன?

"முது தவலிபோய் திருகுவலி வந்ததென்று" சொல்லும்படி ஆங்கிலத்தில் இருந்துதான் தமிழ்மொழி தோன்றியது என்று அவர்களும் சண்டைக்கு வரும் வாய்ப்பிற்கு நாமே பாலம் அமைத்துக் கொடுக்கின்றோம். வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இருக்கின்ற போராட்டம் போதாதென்று ஆங்கிலத்திற்கும் தமிழ்மொழிக்கும் போராட்டமா? இத்தகைய தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா? எண்ணுங்கள்.

குறியீட்டில் எழுத்துகளா?: திருவாளர்களான குழந்தையும், ஞானசம்பந்தனும் உயிர் எழுத்துகளை வடிவம் மாற்றுகின்றபோது மேலும் தலையாய ஒன்றை மறந்துவிட்டார்கள். அவர்களால் உரு

www.thamizham.net - Free E book No 7415

வாக்கப்பட்ட எழுத்துகள், எழுத்துகள்போல் வரிவடிவம் பெறவில்லை. எழுத்துகள் வேறு; குறியீடுகள் வேறு.

க, ச, த, ப என்பன போன்றவை எழுத்துகள்.

ெ, ே, ை, ா என்பன போன்றவை குறியீடுகள்.

எழுத்துகளில் மாற்றம் செய்யும்போது முகாமையாகப் புதிய எழுத்துகளைக் குறியீடுகள் போல் உண்டாக்குவது கூடாது.

எவர் பார்த்தாலும் பார்த்தவுடனேயே அவ்வெழுத்துகள் ஏதோ ஒரு மொழியின் எழுத்துகள் என்ற உணர்வு. ஏற்பட்டால்தான் பின்பு அவற்றால் உண்டாகின்ற மொழியை உணர்ந்து படிக்கும் எண்ணம் தோன்றும். பார்த்தவுடனேயே அவ்வெழுத்து களின் தோற்றம் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக வருகின்ற வட்டக்கோடு, சாய்வுகோடு, படுகிடைக்கோடு, அடைப்புக்குறி, வினக்குறி என்பனபோன்று இருக்குமானால் அவ்வெழுத்துகளின் அழகு குன்றிப்போகும்.

உருவும், அழகும்: 'ஆள்பாதி ஆடைபாதி' என்பதுபோல் எழுத்துகளின் அழகுபாதி ஒரு மொழியின் சிறப்புக்குக் காரண மாகவும் அமைந்துள்ளது என்பதை அறிஞர் உலகம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே எழுத்துச் சீர்திருத்தம் செய்கின்றவர் கள் தாங்கள் கண்டுபிடித்துச் சொல்லும் எழுத்துகளை எளிமைக் காகவும் ஏந்துக்காகவும் கோடுகள் போலவோ, குறியீடுகள் போலவோ காட்டுவார்கள். ஆனால் உறுதியாக அது முற்ற முடிந்த சீர்திருத்தமாக அமைய முடியாது என்பதை யாராக இருந்தாலும் மனத்தில் கொள்ளவேண்டும்.

பண்டைத் தமிழ் அறிஞர்: பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இன்றைய சீர்திருத்தக்காரர்களைவிட எவ்வளவு தெளிவுஉடையவர் கள் என்பது அவர்களுடைய எழுத்துகளிலும் குறியீடுகளிலும் தனித்தனியே புலப்படும். அவர்கள் எழுத்துகளையும் குறியீடு களையும் ஒன்றிற்கொன்று முரணாகாதவாறு வேறு வேறாகவே குறித்துள்ளமை அவர்களது நுண்மாண் நுழைபுலத்தையே காட்டுகிறது.

எடுத்துக்காட்டாக, ெ, ே, ை, ா. என்பவை வேறு வேறாகவே அமைந்துள்ளமையை அறிக

www.thamizham.net - Free E book No 7415

எழுத்துகளும் அவ்வாறே அமைந்துள்ளன. ஆனால் இன்றைய சீர்திருத்தத்தில் உண்டாக்கப்பட்ட உயிர் எழுத்துகள் குழந்தை, ஞானசம்பந்தன் ஆகிய இருவரின் கண்டுபிடிப்புப்படியும ெ, e, 6. J, J, ၉, P. ¶, என்று வருகின்ற எழுத்துகளிலே பல, ஏறக்குறைய ஒரே வகையான வரிவடிவத்தைப் பெற்றிருப்பது மிகுந்த இடர்ப்பாட்டினை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

கையும் தவறும்: பண்டைத் தமிழ்ச் சான்றோர் கண்டு சொன்ன குறியீடுகளை ஒன்றிற்கு மாறாக ஒன்றை ஓர் எழுத்தில் தவறுதலாக இட்டாலும அஃது அதன் நெடுமையையோ அல்லது குறுமையையோதான் காட்டும். எனவே அதனில் உள்ள பிழையைப் பொருளில் மாற்றம் ஏற்பட்டாலும் இடம் பொருள், ஏவல் நோக்கி இஃது இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று உய்த்துக் கூறமுடியும். எடுத்துக்காட்டாக,

கிரியும் பாம்பும் (தவறு)
கீரியும் பாம்பும் (சரி)
கலையும் மாலையும் (தவறு)
காலையும் மாலையும் (சரி)
கொடும் கோம்பும் (தவறு)
கோடும் கோம்பும் (சரி)

மேற்கண்டவற்றில் குறியீடுகள் சார்ந்திருக்கின்ற எழுத்துகள் துல்லியமானவை. முடிவானவை. எனவே என்ன தவறு என்பதனைத் தெளிவாக அறிந்துவிட முடிகிறது. தட்டெழுத்திலும், அச்சுக்கோப்பதிலும் பிழைகள் நேருவது இயற்கை. அவை பெரும்பாலும் மேற்கண்டவாறு குறியீடுகளின் குறுமை. நெடுமைகளில் ஏற்படுகின்ற பிழைகளே! அப்படிச் சொல்வதே மிகுதியுங்கூட. ஓரெழுத்திற்கு மாறாகத் தொடர்பில்லாத வேறோர் எழுத்து விழுவது மிகமிகச் சிறுபான்மை

உண்மை: ஆனால் இவ்வாறின்றிக் குறியீடுகளாலேயே உயிர் எழுத்துகளைப் புலவர் குழந்தையும் திருஞானசம்பந்தன் அவர்களும காட்டியிருப்பதாலும்-அவையும் பல எழுத்துகளுக்கு ஒரே வரிவடிவமாக இருப்பதாலும்-எல்லாவகையிலும் மிகுந்த பிழைகள் ஏற்படுவதற்கு இடமேற்படுகிறது. இதனை அப் பெருமக்கள் உணராதது ஏனோ தெரியவில்லை. வெவ்வேறுஓசையுடைய எழுத்துகளைச் சற்று மாற்றியும்-சாய்த்தும்-தலைகீழாகவும் காட்டியுள்ளதால் அச்சுக்கோப்பில் கணக்கில்லாத பிழைகளே மலிந்து நிற்கும் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது.

அவர்கள் காட்டியுள்ள எழுத்துகள் வெவ்வேறு முறையில் கிடப்பதாலேயே வெவ்வேறு எழுத்துகளாகக் காட்சியளிக்கின்றன அவை எல்லாவற்றையும் ஒன்றுபோல் நிமிர்த்தி வைப்போ

www.thamizham.net - Free E book No 7415

மாளுல் என்ன ஓசையுடைய எழுத்து என்றே சொல்லமுடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இந்நிலை இன்றைய குறியீடுகளுக்கோ எழுத்துகளுக்கோ இல்லை என்பதை உணரவேண்டும். எடுத்துக் காட்டாக,

9, e, 6, ே, ெ, ை

என்ற குறிகளை இ, ஈ, எ, ஏ, ஒ, ஓ என்ற எழுத்துகளாகக் கூறுகிருர்.

எண்ணு, எழுத்தா?: முதல் மூன்றைப் பாருங்கள். ஒன்றுபோல் காட்சி தருகின்றன. ஏறக்குறைய எண்களில் 6, 9- போல் உள்ளன.

9 – இகர ஓசை
e – ஈகார ஓசை
6 – எகர ஓசை

மூன்றும் ஒரே வரிவடிவம். அவை நிலைமாறிக்கிடக்கின்றன அவ்வளவே இகரத்தை அப்படியே தலைகீழாக மாற்றினுல் எகர ஓசையாகி விடுகிறது. இதனுல் எத்தகைய விளைவுகளும் பிழைகளும் நேரும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை

பண்டைத் தமிழ்ச் சான்ருேர்கள் கண்டுசொன்ன குறியீடுகளில் கூட இத்தகைய பெருத்த தவறு ஏற்படுவதில்லையே. இதனை எண்ணும்போது தான் அவர்களின் அறிவும் திறமும் நுண்மையும் புலப்படுகின்றன.

அதே போன்று ஏகார, ஓகாரத்திலும் நிலை மாறினுல் பெரும் பிழையில் முடிகிறது. எடுத்துக்காட்டாக,

(ை) ஓடி வந்தான் என்பதை

(ெ) ஒடி வந்தான் என்ருல் தவற்றைப் புரிந்து கொள்ள முடிகிறது.

(ஏடிவந்தான் என்று (ை) இப்படிப் படுக்கையாக விழுவதற்கு மாருக இப்படி]ே] நெடுமையாக விழுவதனுல் ஏற்பட்டு விடுகிறது.

இப்பிழையை எப்படிப்பட்ட சூழல்களை நோக்கினுலும் உணர்ந்து கொள்வது அருமை. இத்தகைய நேரத்தில்தான் ஒரே குறியீட்டில் இரு வெவ்வேறு ஓசை உடைய எழுத்துகளை உருவாக்கியதன் தவறு பெரிதும் எண்ணிப்பார்க்க வேண்டியதாகிறது. இந்நிலை புலவர் குழந்தை, திருவாளர் திருஞானசம்பந்தன் ஆகியோர் ஆக்கிய எழுத்துச் சீர்திருத்தத்திலும் ஏற்படவே செய்கிறது. [தொடரும்]

www.thamizham.net - Free E book No 7415

(சுவடி 7-ஓலை-1, இ௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியற் கலைச்சொற் பட்டி-2.

அழகப்பர் தமிழ்மன்றம், காரைக்குடி

(C. தொடர்ச்சி)

Convergent Series-குவித்தொடர்
Convertors-மாற்றிகள்
Convex-குவி
Coping-ஆரல்
Copper-செம்பு (தாமிரம்)
Corbel-தண்டியம்
Core-மையப்பகுதி
Coral Snake-பவளப்பாம்பு
Cornice-எழுதகம்
Corrosion-அரிமானம்
Cosmic Ray-விண்கதிர்
Counters-எண்ணிகள்
Couple-இரட்டை (இணை)
Course-படை (கடவை)
Cracking-வெப்பப்பகுப்பு
Crate-சாரைப்பாம்பு
Critical Angle-வரம்புக்கோணம்
Critical State Constants வரம்பு நிலை எண்கள்
Crystal-படிகம்
Crystalloid-நுண்படிகக் கரைசல்
Curing-பதப்படுத்துதல்
Cycle-சுழற்சி
Cyclotron-சுழல்வழித்துகள் முடுக்கி
(Engine)
cylinder-கொள்கலன்
cylinder-உருளை

D

Dampness-ஓதம்
Data-கொடுகோள்
Datum-குறிமட்டம்
Decantation-இறுத்தல்
Degrees of freedom-சமநிலைச் சாராமாறிகள்
Delta connection முக்கோண இணைப்பு
Dense-அடர்ந்த
Derivative-துகள்விகிதம்
Design-ஆய்வமைப்பு
Deutrium-கனநீரியம்
Deviation-விலகல்
Diamagnetism-காந்த எதிர்விப்பு
Dielectric Strength-மின்னெதிர் வலிமை
Differentiation-துகட்பாடு
Diffraction-ஒளிக்கோணல்
Diffusion-ஊடுதல்
Digestion-செரிமானம்
Dilute-நீர்த்த
Diode-இருமின்வாயி
Dip-குத்துச்சாய்வு
Direct current ஒருதிசை மின்னோட்டம்
Distillation-காய்ச்சி வடித்தல்
Destructive Distillation } சிதைத்து வடித்தல்

www.thamizham.net - Free E book No 7415

D தொடர்ச்சி

Distilled Water-வாலைவடிநீர்
Divergent Series-விரித்தொடர்
Donor Level-அளிமட்டம்
Drains-வடிகால்
Drain Pipe-வடிகாற்குழாய்
Drier-உலர்த்தி
Dryness-வறட்சி
Dry Rot-வறட்சி உளு
Ductility. நீள்தன்மை
Dynamics-இயங்கியல்

E

explosion chamber–வெடியறை
Extensive- பரந்த
Extraverts-புறநாட்டத்தினர்
Eccentricity-மையம்விலகல்
Efficiency-செயல்திறன்
Efflorescence பொடிதல், உப்புப் பூத்தல்
Elastic-Limit-மீள்எல்லை
Elasticity-மீள்தன்மை
Electric-Discharge-மின்னிறக்கம்
Electric Potential Barrier - மின்னரண்
Electric Power House - மின்திறன் இல்லம்
Electric Waves-மின்னலைகள்
Electron. எதிர்மின்னி
Electronics-துகள்மின்னியல்
electrolyte-மின்னூற்பகுபடு பொருள்
electroscope-மின்காட்டி
Electro chemical-மின்னியை [பிய
(a) Reaction-எதிர்வினை
b) Series-தொடர்

Electron cloud-எதிர்மின்முகில்
Electronic Emission-எதிர் மின்னிஉமிழ்வு
Emission
- Field-புலமின்உமிழ்வு
- Photo ஒளிமின் உமிழ்வு
- Secondary-இரண்டாம் நிலைஉமிழ்வு

electro Magnetic Wave-மின் காந்த அலை
Electron Micrascope-எதிர் மின்னிஉருப்பெருக்கி
Electromotive Force-மின் னியக்குவிசை
Electeode Potential-மின்வாய் மின்னழுத்தம்
Electro Static (a) Accelerator - நிலைமின் புலமுடுக்கி
(b) Field-நிலைமின்புலம்
Element-தனிமம்
Elevation-முகத்தோற்றம்
Ellipse-நீள்வட்டம்
Emery Paper-குருந்தத்தாள்
Emitter-உமிழி
Emulsion Film-குழம்புப்படலம்
Energy
- Potential-நிலையாற்றல்
- Kinetic- இயங்காற்றல்

Energy meter.மின்னாற்றல் மானி
End View-பக்கவாட்டுத்தோற்றம்
Engine-எந்திரம்
Erosion-தேய்மானம்
Escape Velocity.தப்புசெலவு
Evaluation-தீர்மானித்தல்
Evolution-கூர்தலறம்

E

equation-சமன்பாடு
equation of state-நிலையின் சமன்பாடு
equilibrant-நிலைப்பி
equilibrium-சமநிலை
excitation-கிளர்வு
exclusion principle-விலக்கல் கோட்பாடு
exhaust-வெளியேற்றம்
experiment-செயல்வழி ஆய்வு
[Test-தேர்வு Research ஆய்வு]

F

Face Stones-முகக்கற்கள்
factor of Safety-காப்புக்காரணி
Fat-கொழுப்பு
Field Gradient-புலமாறுவேகம்
Field Theory-புலக்கோட்பாடு
Filament-இழை
Film-படலம்
[Layer-அடுக்கு]
[Stratum-படிவம்]
Filter-வடிப்பான்
Finishing Work-முடிப்புவேலை
Fission-கருவுடைப்பு
Fissure-வெடிப்பு
Flag Stores-தளக்கற்கள்
Flame-தழல்
Flight-ஓட்டம்
Floor Plan-தளப்படம்
Fluid-பாய்மம்
Fluorescence-கிளர்ஒளிவு
Fluorescent Lamp-ஒளிர்விளக்கு
Flux-இளக்கி
(Chemistry)
Focussing Methods-குவிமுறைகள்
Force { Conservative-பொன்றுவிசை; Dissipative-பொன்றுவிசை; Gravitatinal-புவியீர்ப்பு விசை }
Formula-வாய்ப்பாடு
Form work-வடிவமைப்பு
Fossils-கல்மாறி, தொல் உயிரெச்சம்
Founatin-ஊற்று
Foundation trench-கடைக்காற் குழி
Fraction-கூறு
Frequency-அதிர்வெண், அலைவெண்
Friction-உராய்வு
Fuel Pump-எரிபொருள் இறைவை
Full wave Rectifier-முழு அலை ஒருவழிப்படுத்தி
Function-சார்பு, கோவை,
Function of Function-சார்பட்கிய சார்பு
Functioning of Organism } உயிர் நடத்தை
Fungus-பூசணம்
Funnel-பெய்குழல், வைத்தூற்றி
Fuse-உருகி
fusion-கருப்புணர்ச்சி, கருவிணைப்பு

G

Galaxy-விண்மீன்குழு
Gallary-படிமேடை
Gaseous State-வளிநிலை

www.thamizham.net - Free E book No 7415

F

Flux Linkages–வெள்ளத் தொடர்புகள்

G

Gases of Combustion-கனல் வளி
Gastric Juice–குடற்சாறு
Galvany Series-கால்வானித் தொடர்
Gemmology–மணியியல்
Gene-பண்பகம்
Generator -மின்னுாக்கி
Geography -புவியியல்
Geology-நிலப்பொதியியல்
Geometry (a) Plane-தள வடிவியல்
(b) Solid–திண்வடிவியல்
Gilamonster–பெருநச்சுப்பல்லி
Glow Worm–மின்மினி
Gold Leaf Electroscope | பொன்னிழை மின்காட்டி
Grade-தரம்
Gradient–மாறுவேகம்
Grate-காற்றுவழி

H

Half Life Time–அரை ஆயுட் காலம்
Half Wave Rectifier-அரையலை ஒருவழிப்படுத்தி
Hand Rail–கைப்பிடி
Hand Pipe–கையிறைவை
Hardness–கடினத்தன்மை
Harmonics–பகுதிஅலைகள் (பகலைகள்)
Harder Stones–நாட்டக்கற்கள்
Heating Surface-வெப்பமூட்டுப் பரப்பு
Heat Treatment–வெப்ப வினைப்பாடு
Heavy Hydrogen-கனநீரியம்
Heavy Water–கனநீர்
Heredity-மரபு
Hereditary Factors-மரபுப் பண்புகள்
Herring Bone Bond-மீன் எலும்புப்பிணைப்பு
High Specific Heat-மீ தன்வெப்பம்
High Tension Battery } மிகையழுத்த மின்கலஅடுக்கு
Horizontal Focussing-கிடைக் குவிப்பு
Hydration–நீரேற்றம்
Hydragen–நீரியம்
Hydroulics-நீரியல்
Hydraulic Machinary-நீர்ப் பொறியியல்
Hydraluic Powor Station நீர்மின் நிலையம்
Hydrophobia–நீர்வெறுப்பு நோய்
Hydroponics-நீர்மவேளாண் (மை
Hygroscopic–ஈரஞ்சார்ந்த
Hyperbola–மீபரவளைவு
Hypothesis-ஊகம்
Hysteresis–(காந்தத்) தேக்க விளைவு

www.thamizham.net - Free E book No 7415

உணவுக்குழல் புற்றுநோய்
[CARCINOMA OF THE OESOPHAGUS]

பர். பொ. இளங்கோ (பொ. குமாரசாமி)
பர். சா. க. பழனிசாமி.

உணவுக்குழல் தசையாலும், நார்ம இழையங்களாலுமான, தொண்டையையும், இரைப்பையையும் இணைத்துக்கொண்டிருக்கும் குழாயாகும். இதன் வழியே உணவு தொண்டையிலிருந்து இரைப் பையை அடைகின்றது. அதன் மேற்பகுதி கழுத்திலும், இடைப்பகுதி (இதுவே பெரும் பாகமாகும்) நெஞ்சுக் கூட்டினுள்ளும், கடைப்பகுதி வயிற்றிலும் உள்ளன. அவை முறையே கழுத்துப்பகுதி, நெஞ்சுப் பகுதி, வயிற்றுப்பகுதி உணவுக்குழல் எனப் பெயர் பெறும். நெஞ்சுக் கூட்டில் அது நெஞ்சு மையப்(Mediastinum)பின் பகுதியில் அமைந்துள்ளது. உணவுக் குழலில் ஏற்படும் புற்றுநோயைப் பற்றி ஈண்டுச் சிறிது காண்போம்.

உணவுக்குழல் புற்றுநோய் மிகவும் சிக்கலான ஒன்றாகும். பெரும் பாலும் இந்நோய் முதிர்ந்த நிலையிலேயே, அதாவது உணவுக் குழலி லிருந்து சுற்றியுள்ள உறுப்புகளுக்கும், உணவுக்குழலைச்சார்ந்தநிணமக் கட்டிகளுக்கும் பரவிய நிலையிலேயே கண்டுபிடிக்கப்படுகின்றது. முன் னேறியுள்ள (?) தற்காலப் பண்டுவங்களைப் பயன்படுத்தியுங்கூட 2% அல்லது 3% நோயாளிகளே இந்நோய் கண்டுபிடிக்கப்பட்டபின் 5 ஆண்டுகளுக்கு உயிர்வாழ்கின்றனர்.

உணவுக்குழல் புற்றுநோய் பெண்களை (28%) விட ஆண் களுக்கே (72%) மிகுதியும் ஏற்படுகின்றது. ஆண்களுக்கு மிகுதி யாக வரும் புற்றுநோய்களுள் இது நான்காவது இடத்தைப் பெறு கின்றது. [முதலாவது–புராசுடேட்டு (Prostate), இரண்டாவது– இரைப்பை, மூன்றாவது–(மலப்பையுள்ளிட்ட) பெருங்குடல்.] சப்பான் நாட்டில் இது மேற்கத்திய நாடுகளைவிட மிகுதியாகவும் இள அகவை யிலும் காணப்படுகின்றது. ஒரோவழி இது மூச்சுக்கிளைக்குழலிலிருந்து பரவியதாகவும் (Secondary) இருக்கலாம்.

நோயியல்: இஃது அடுக்குக் கண்ணறை (Squamous celled) வகையினதாகவோ, சுரப்பிக் கண்ணறை (Adino carcinoma) வகையினதாகவோ இருக்கலாம். சுரப்பிக் கண்ணறை வகையினது பெரும்பாலும் உணவுக் குழலின் கடைசிப் பகுதியிலேயே ஏற்படும்.

www.thamizham.net - Free E book No 7415

அல்லது இஃது இரைப்பையிலிருந்து பரவியதாகவோ இருக்கலாம். அடுக்குக் கண்ணறை வகை உணவுக் குழலின் மேற்பகுதியிலும், பெரும்பாய்குழல் (Aorta) உணவுக் குழலைக் கடக்குமிடத்திலும், உணவுக்குழல் பிரிதசையை (Diaphragm)க் கடக்குமிடத்திலும் உள்ள சுருக்கங்களில் மிகுதியாகக் காணப்படும்.

இந்நோய் உணவுக்குழலின் நடுப்பகுதியில் மிகுதியாகவும் (50%), அடுத்தபடியாகக் கடைப்பகுதியிலும் (33%), குறைவாக மேற்பகுதியிலும் (17%) ஏற்படுகின்றது. மேற்பகுதியில் ஆண்களை விடப்பெண்களுக்கேமிகுந்து காணப்படுகின்றது. இந்நோய் (1) சுருக்கமாகவோ, [2] விளிம்புகள் உயர்ந்து புறமாக வளைந்த புண்களாகவோ, [3] எளிதாகச் சிதையும் கட்டிகளாகவோ தோன்றலாம்.

பரவுதல்: இந்நோய் [அ] நேர்வழியாகவோ, [ஆ] நீர்மவழியாகவோ, [இ] குருதிவழியாகவோ உடலின் பிற பகுதிகளுக்குப் பரவுகின்றது.

(அ) நேர் வழி: நேர் வழியாகவே இந்நோய் பெரும்பாலும் பரவுகின்றது. இரு பக்கவாக்கிலும், நீளவாக்கிலும் பரவும் தன்மைத்து. இஃது உணவுக்குழலின் தசைப்பகுதியை ஊடுருவி (அரித்து) விட்டுக் கழுத்திலும், நெஞ்சுமையப்பின் கட்டிலும் உள்ள முகாமையான உறுப்புக்களைத் தாக்குகின்றது; அஃதோடு நுரையீரலையும், மூச்சுக்குழலையும் (Trachea) தாக்குகின்றது. உணவுக்குழல் தொளைக்கப்பட்டு, நெஞ்சுமைய அழற்சியும் ஏற்படலாம். ஒரோவழி, இந்நோய் பெரும்பாய் குழலைத் தொளைப்பதால் மிகுந்த குருதி ஒழுக்கேற்பட்டு உயிர்க்கு அழிவு ஏற்படலாம்.

(ஆ) நீர்மவழி: சளிப்படலத்திற் கடியிலுள்ள நீர்மக் குழல்களை (Lymph Vessels) பற்றிப் பரவி, சுற்றிலும் சிறுசிறு கட்டிகளைத் தோற்றுவிக்கலாம். நீர்மத்தின் (Lymph) வழி மிதவை (Embolism) யாகச் சென்று சுற்றியுள்ள நீர்மக் கட்டிகளுக்குப் (Lymph Nodes) பரவலாம். கழுத்துப்பகுதி உணவுக் குழலிலிருந்து, கழுத்துப்பட்டையெலும்புக்கு மேற்புறமாகவுள்ள நீர்மக் கட்டிகளுக்குப் பரவுகின்றது. நெஞ்சுப் பகுதியிலிருந்து, அப்பகுதியைச் சுற்றியுள்ள நீர்மக் கட்டிகளுக்கும், மூச்சுக்குழல் –மூச்சுக் கிளைக்குழல் நீர்மக் கட்டிகளுக்கும், பிரிதசையின் மேற்பகுதியிலுள்ள நீர்மக் கட்டிகளுக்கும் செல்கின்றது. வயிற்றுப் பகுதியிலிருந்து இரைப்பையின் சிறுவளைவிலும், வயிற்

www.thamizham.net - Free E book No 7415

றச்சுப் பாய் குழலை (Cocliac Axis)ச் சுற்றியுமுள்ள நீர்மக் கட்டி களுக்குப் பரவுகின்றது. பொதுவாக நீர்மவழிப்பரவுதல் கீழ்நோக் கியே நடைபெறுகின்றது.

(இ) குருதிவழி: இவ்வழியில் மிகவும் அரிதாகவே நடைபெறு கின்றது. ஒரோவழி இவ்வழியாகக் கல்லீரலுக்கும், நுரையீரலுக்கும் இந்நோய் தாவுகின்றது.

அறிகுறிகள்: 45 முதல் 70 ஆண்டு அகவையுடைய ஆண்களே பெரும்பாலும் தாக்கப்படுகின்றனர். சாரசரி அகவை 63 ஆண்டுகளா கும். பெண்களுக்குப் பெரும்பாலும் 55–60 அகவையில் தோன்றுகின்றது.

முதன்மையான அறிகுறி–பெரும்பாலும் ஒரே அறிகுறியு மானது–விழுங்கும்போது வலியுடைமையாகும். சில சமையங்களில், இப் புதுவளர்ச்சியின் ஒருபகுதி அழுகி அழிவதால் சில காலத்திற்கு விழுங்குவது எளிதாக இருக்கலாம். மாறாக, பெரும்பாலும் விழுங்கு வதற்குக் கடினமாக இருப்பது ஒரே சீராக மிகுதியாகிக் கொண்டிருக் கும். 40% நோயாளிகள் மட்டுமே இவ்வறிகுறி தோன்றிய மூன்று திங்களுக்குள் மருத்துவரை நாடுகின்றனர். பெரும்பாலானோர் நீர்ப் பொருட்களை உட்கொள்ளத் தடை ஏற்படும்வரை கவனியாதிருந்து விட்டுப் பின்னரே மருத்துவரை நாடுகின்றனர். அக்கால் நோய் முதிர்ந்த நிலையை அடைந்துவிடும். உட்கொண்ட உணவு எதிர்த்து (திரும்பி) வருதல் உண்டாகும். அப்படி எதிர்த்துவரும் உணவு (உமிழ்நீரினால்) காரத்தன்மையதாயும், (புதுவளர்ச்சியிலிருந்து வந்த) குருதிபடிந்ததாயும் இருக்கும். உணவுக்குழலின் கடைசிப்பகுதியில் இந்நோய் காணின் பசியின்மையும் ஏற்படும். பொதுவாக இந்நோயில் வலி ஏதும் இருக்காது. அப்படி வலி ஏதும் ஏற்படின் அது நோய் முதிர்ந்த நிலையிலேயே ஏற்படும்.

ஆய்வுகள்: (அ) இரான்சன்பட ஆய்வு: விழுங்குங்கால் வலி யுணரும் அனைவருக்கும் வெண்காரக்கூழை (Barium Meal) உட் கொள்ளக் கொடுத்து, அஃது உணவுக்குழல் வழியாகச் செல்லுங்கால் இரான்சன் படங்கள் எடுத்து ஆயவேண்டும். இதனால் பெரும்பாலும் இந்நோயைக் கண்டறியலாம். சில சமயங்களில் இந்த ஆய்வுக்கும் இந்நோய் தப்பிவிடலாம். ஆதலின் இம்முறை யொன்றைக்கொண்டே இந்நோயில்லை யென முடிவு கொள்ளக்கூடாது.

www.thamizham.net - Free E book No 7415

(ஆ) உணவுக்குழலகம் நோக்குதல்: (Endoscopy): உணவுக் குழலக நோக்கி (Endoscope) மூலம் பார்க்கின் இந்நோயைக் கண்டறியலாம். மேலும் இக்கருவியின் துணைக்கொண்டு ஐயப்பாட்டுக்கிடமான இடங்களிலிருந்து சிறு இழையப் பகுதிகளை எடுத்து, அதற்கான தனி வண்ணமேற்றி நுண்பெருக்கி மூலம் ஆராய்ந்தறியலாம்.

(இ) மூச்சுக்கிளைக்குழலகம் நோக்கல்: (Bronchoscopy): இந்நோய் மூச்சுக் கிளைக்குழல்களுக்குப் பரவிய காலத்து இருமலும், சீழ்கொண்ட சளியும் தோன்றும். இந்நிலையில் மூச்சுக் கிளைக்குழலக நோக்கி (Bronchoscope)யின் மூலம் ஆய்ந்தால் இந்நோயைக் கண்டறியலாம்.

பண்டுவம்: விழுங்கும்போது வலியுடைமையே மிக முகாமையானதாகும். இஃது எவ்விதத்திலேனும் நீக்கப்படவேண்டும். பண்டுவம்.[1] அறுவை மருத்துவம், [2] கதிர்வீச்சு மருத்துவம் (Irradiation), அல்லது [3] குறுவழி மருத்துவம் (Palliative Treatment) என இவண் மூவகைப்படும்.

[1] அறுவை மருத்துவம்: நோய்கொண்ட பகுதியை அதனைச் சார்ந்த நீர்மக்கட்டிகளோடு முற்றிலும் நீக்கிவிடுவதே அறுவை மருத்துவத்தின் நோக்கமாகும். நோய்கொண்ட உணவுக்குழலின் பகுதியை நீக்கலாமா என்பதை, அறுவைமூலம் அப்பகுதியை அடைந்து, அது சுற்றியுள்ள உறுப்புகளோடு [இந்நோயால்] பிணைந்துள்ளதா என்றறிந்த பின்னரே முடிவுசெய்ய வேண்டும். அறுவைமூலம் அப்பகுதியை அடைந்து நோக்குங்கால் ஏறத்தாழ 50% நோயாளிகளிடம் இந்நோய் அறுவை மருத்துவம் செய்ய முடியாத அளவுக்குப் பரவி முதிர்ந்துள்ளதை அறியலாம். ஈண்டு நோயாளிக் கேற்பட்ட துன்பங்களை நீக்கக் குறுவழி மருத்துவ முறைகளையே கையாள வேண்டும். நோய் அறுவை செய்ய முடியும் நிலையில் இருப்பின் கீழ்க்காணும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

[அ] புற்றுநோய் உணவுக்குழலின் இரைப்பை முனையில் [வயிற்றுப்பகுதி] இருக்குங்கால், அப்பகுதி உணவுக்குழல், இரைப்பை, இரைப்பையைச் சார்ந்த நீர்மக்கட்டிகள், மண்ணீரல், காப்புத்திரைகள் (Umenta), கணையத்தின் (Pancreas) வால் பகுதி ஆகியவற்றை அறுவை மூலம் நீக்கிவிட வேண்டும். பின்னர் சிறுகுடலின் இரண்டாம் பகுதி (Jejunum)யையும், மீந்த உணவுக்குழலையும் இணைத்துவிட வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7415

(ஆ) நெஞ்சுப்பகுதி உணவுக்குழலின் பின்பகுதி நோய் கொண்டவிடத்து, நோய்கொண்ட உணவுக்குழலை அதனைச் சுற்றியுள்ள உறுப்புகளினின்று பிரித்து நீக்கிவிடவேண்டும். பின்னர் இரைப்பையை அதனைச் சுற்றியுள்ள உறுப்புகளின் பிடிப்பினின்று தளர்த்தி, மிகுந்த மேற்பகுதி உணவுக் குழலோடு இணைத்துவிட வேண்டும்.

(இ) நோய் உணவுக் குழலின் மேற்பகுதியில் இருக்குமிடத்து உணவுக் குழலையும், அதனைச் சார்ந்த நீர்மக்கட்டிகளையும் நீக்கிவிட வேண்டும். பின்னர், பெருங்குடலின் ஒரு பகுதியைத் துண்டித்து அதன் குருதி ஓட்டத்திற்கு இடையூறு நேரா வண்ணம் மேல்நோக்கி நகர்த்திச் சென்று, ஒரு முனையை உணவுக்குழல் பகுதித் தொண்டைக்கும், மறுமுனையை இரைப்பைக்கும் இணைத்துவிட வேண்டும். இதன் வழியாக உணவு தொண்டையிலிருந்து இரைப்பையை அடையும். பெருங்குடலின் தொடர்ச்சியை எஞ்சிய பெருங்குடல் பகுதிகளுடன் ஒன்றோடொன்றை நேரடியாக இணைத்துச் சரி செய்யவேண்டும்.

[2] கதிர்வீச்சுப் பண்டுவம்: உணவுக்குழலின் மேற்பகுதி, இடைப்பகுதிப் புற்றுநோய்களுக்குக் கதிர்வீச்சுப் பண்டுவம் சிறந்ததாகும். இதன் பலன் ஒரு சில திங்களுக்கே நீடிக்குமெனினும், இது விழுங்குந் திறனைச் சரிசெய்கின்றது. தற்போதைய தொளைக்கும் கதிர்வீச்சுகள் [Penetrating Irradiation] நல்ல பலனொடு நீண்ட வாழ்நாளையும் அளிக்கின்றது. உணவுக் குழலின் கடைப்பகுதிப் புற்றுநோய் பெரும்பாலும் சுரப்பிக்கண்ணறை வகையினதாக இருப்பதால் ஈண்டு கதிர்வீச்சுப்பண்டுவம் பலனளிப்பதில்லை.

[3] குறுவழி அறுவை மருத்துவம்: [Palliative Treatment] குறுவழி மருத்துவமானது. நோய் முதிர்ந்து நீக்கவியலா நிலையில் இருக்குங்கால், அதனால் ஏற்படும் துன்பங்களை மட்டும் நீக்க மேற்கொள்ளும் பண்டுவமாகும்.

[அ] அறுவை மூலம் நோயிடமடைந்து நோக்குங்கால் நோய்கொண்ட பகுதி நீக்கவியலா நிலையில் இருப்பின், நோய் உணவுக்குழலின் கீழ்ப்பகுதியிலிருப்பின், நோய்கொண்ட பகுதிக்குமேல் உணவுக்குழலைத் துண்டித்து அதைச் சிறுகுடலின் இரண்டாம் பகுதியோடு இணைத்துவிடலாம். நோய் உணவுக் குழ

www.thamizham.net - Free E book No 7415

வின் மேற்பகுதியிலிருப்பின், அதற்கு மேல்பகுதி உணவுக் குழலைத் துண்டித்து, அதை மேனோக்கி நகர்த்திவந்த இரைப்பையோடு இணைத்துவிடலாம்.

[ஆ] புற ஆய்வுகளே நோயின் முதிர்ந்த நிலையைக்காட்டுமிடத்து- வாய்வழியாக இரைப்பைக்கு ஒரு குழாயைச் செலுத்தி அதை நிலையாக இருக்கச் செய்துவிட வேண்டும். இதன்மூலம் உணவு இரைப்பையை அடையும். இதனால் விழுங்கமுடியா நிலை நீக்கப்படுகின்றது.

இறுதி விளைவுகள்: புற்றுநோய் நீக்கப்படாவிடில் அது கீழ்க்காணும் ஒருவழியில் இறப்பை ஏற்படுத்திவிடும்:

1. உடலின் பொதுநிலைச் சீர்கேடு, நீரிழப்பு முதலியன.
2. மூச்சுச் சிறுகுழல் தாக்குண்டு தொளைக்கப் படுவதால் ஏற்படும் நுரையீரல் அழற்சி.
3. நெஞ்சுமைய அழற்சி [Mediastinitis]
4. பெரும்பாய்குழல் அரிக்கப்பட்டு உடைதல்.

(தழுவல்;—BAILEY & LOVE'S "Short Practice of Surgery")

தமிழ்ப்புலமையும் ஓய்வும் செல்வ நிலையுஞ் சிறந்த தமிழ்த் தொண்டர்க்கு வேண்டுகோள்.

எனக்கு மூப்புமிக்கும் வலக்கண் படலத்தால் கண்ணொளிகுன்றியும் வருவதனாலும், உண்டிச்சாலை யுணவு ஏற்காமையாலும், என் பொத்தக நிலையம் இங்குக் காட்டுப்பாடி விரிவில் இருப்பதனாலும், நான் சென்னையில் தங்கி அங்குப் பாரி அச்சகத்தில் (௩௬. பெருவழி (பிராடுவே), சென்னை-1) அச்சாகிவரும் என் 'திருக்குறள் தமிழ் மரபுரை) மெய்ப்புக்களைத் (Proofs திருத்த வியலாமையால் ஓய்வுஞ் செல்வநிலையுஞ் சிறந்த தமிழறிஞர் தம் சொந்தச் செலவில் சென்னையில் தங்கி, அம் மெய்ப்புக்களைத் திருத்துவராயின், எனக்கும் தமிழுக்கும் பெருநன்மை செய்தவராவர். அவர் பெயரும் அவ்வுரை முகவுரையிற் குறிக்கப்பெறும்.

ஞா. தேவநேயன்.

---

www.thamizham.net - Free E book No 7415

(32-வது பக்கத் தொடர்ச்சி)

பெல்: (கருவியுள்) என் அன்பார்ந்த வாட்சனே! உடனே இங்கே வந்துசேர்.

வாட்சன்: (ஒரு நிமையத்துக்குள் ஓடிவந்து) நீங்கள் பேசுவது நன்றாகக் கேட்கிறது. தலைவரே! சொல்லுக்குச்சொல் தெளிவாகக் கேட்டது. இறுதியாக இந்தக் கருவி வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

பெல்: ஆ...! அப்படியா?...சரி. ஒரு வழியாக நாம் வெற்றிகண்டு விட்டோம் எனினும் இன்னும் சிறப்பாகக் கேட்குமாறு நாம் கருவியைச் செப்பம் செய்யவேண்டும். இதனை அப்பர்டுக்குத் தெரிவித்துவிடு. அவர் உரிமைப் பதிவுக்குரிய நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வார்.

வாட்சன்: உடனே சென்று தெரிவிக்கிறேன்.

(வாட்சன் செல்லக் காட்சி முடிவு.)

காட்சி-3

இடம்: பெல்லின் ஆய்வகம்
உள்ளோர்: பெல், வாட்சன், அப்பர்டு.

காலம்: தி. பி. 1907 சுறவ மாதத்தில் ஒருநாள் மாலை.

அப்பர்டு: (வந்துகொண்டே) தங்களுக்கு உரிய பிறந்தநாள் பரிசை அளிக்க வேண்டுமென்பதால்தான் காலத் தாழ்த்தமாயின்று. இதோ......

பெல்: (உறையைப் பிரித்து) தொலைபேசிக் கருவியின் உரிமையை இன்றே பதிவு செய்து விட்டீர்களே!

அப்பர்டு: ஆமாம். இதன் புகழை மக்களுக்குணர்த்த வரும் கோடையில் பிலடெல்பியாவில் நடைபெறப் போகும், பன்னூற்று நூற்றாண்டு விழாக் கண்காட்சியில் இதனை இயக்கி விளம்பரம் செய்யலாம்.

பெல்: கருவியில் இன்னும் மிகுந்த சீர்திருத்தம் தேவைப்படுகிறதே!

அப்பர்டு: இன்னும் ஆறு கிழமைகள் உள்ளனவே! அதற்குள் சரி செய்து வையுங்கள்: வாட்சனும் நீங்களும் சேர்ந்தால் முடியாதா, என்ன!

வாட்சன்: முயல்கிறோம். விருந்து காத்திருக்கிறது! செல்லலாமா?

(மூவரும் செல்லக் காட்சி முடிவு)

www.thamizham.net - Free E book No 7415

காட்சி-9

1907-ஆம் ஆண்டு மீன மாதம். பிலடெல்பியா நூற்றாண்டு விழாக் கண் காட்சி மண்டபம். நமது கதைத் தலைவர் பெல் தமது கருவியுடன் அமர்ந்திருக்கிறார். தமது சிறந்த கண்டுபிடிப்பை-தொலைபேசிக்கருவியைக் கண்டு பாராட்ட ஏராளமான மக்கள் வருவார்கள்; மகிழ்ந்து செல்வார்கள் என்ற எண்ணத்தில் தமது கருவியைப் பற்றிக் கேட்கும் மக்களுக்குத் தெளிவாக விளக்குவதற்காக உணர்வார்ந்த உள்ளத்தில் கரைகாணா அரியதொரு பேருவகைக் கடல்பெருக, அணியமாய் அமர்ந்துள்ளார். கண்காட்சி தொடங்குகிறது. வெள்ளமென மக்கள் குழாம் விரைந்து வந்து கண்டு களித்துச் செல்கிறது. ஆனால்...28 அகவையே நிரம்பிய குறுந்தாடி இளைஞனின் கருவியைப்பற்றி மக்கள் சிறிதும் எண்ணிப்பார்க்கவேயில்லை. அறிந்தவர்கள்போற் காணப்பட்டனர் சிலர். பெல் தமது கருவியின் புரட்சியை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார், என்றாலும் என்னவென்று கேட்பாரில்லை. மனம் நொந்தார். உடனே திரும்பிவிட எண்ணுகிறார். அப்பர்டுவிடம் தமது திட்டத்தைக் கூறுகிறார்.

அப்பர்டு: பேராசிரியர் பெல் அவர்களே! சிறிதும் மனந்தளராதீர்கள். பொதுமக்கள் இதன் சிறப்பை உணராமல் இருக்கலாம். எனினும் வரும் ஞாயிற்றுக்கிழமை பிரேசில் அரசரும் அரசியும் பிரித்தானிய அறிவியலறிஞர் வில்லியம் தாம்சனும் நம் அமெரிக்கப் பேராசிரியர் என்றியும் வருகிறார்கள். அவர்களாவது இதன் சிறப்பை உணரக்கூடும்.

பெல்: எனக்கு இவற்றில் எல்லாம் நம்பிக்கையில்லை, அன்பரே! நான் உடனே ஊருக்குச் செல்ல விரும்புகிறேன். என் கருவியைப் பற்றிக் கவலைப்படாத மக்களின் முன் நான்படும் மனத்துன்பம் எவ்வளவு தெரியுமா?

அப்பர்டு: வருந்தாதீர்கள். அருள்கனிந்து சிறிது பொறுமையைக் கையாளுங்கள். வரும் ஞாயிற்றுக்கிழமைவரை-இன்னும் இரண்டே யிரண்டு நாட்கள்தாம் இருந்து செல்லுங்கள்.

பெல்: தங்கள் வேண்டுகோளுக்காகத்தான் நான் இருக்கப் போகிறேன். அஃதாவது இன்னும் இருநாள் துன்பப்படப் போகிறேன்.

அப்பர்டு: துன்பத்தின் இறுதி இன்பமாகத்தான் இருக்கும். வருந்தாதீர்கள். முதலில் நீங்கள் ஓய்வெடுக்கச் செல்லுங்கள்.

(காட்சி முடிகிறது) (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7415

அமைச்சரவையின் கவனத்திற்கு.

பன்னெடுங்காலமாக அரசியல், குமுகாயம், மொழி, இலக்கியம் போன்ற துறைகளில் ஆரியப் பார்ப்பனர் செய்துவந்த கேடுகள் மிகப்பல. இவற்றினின்று விடுபடப் பெரியார் போன்றவர்கள் அளப்பரிய பணிகள் செய்தும் தமிழன் இன்னும் விழித்தெழவில்லையென்பது ஆரியப் பார்ப்பனர் செய்துள்ள கேடுகளின் தன்மையையே புலப்படுத்தும்.

இதனை உணர்ந்தும் உணராதவர்களாகவும் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள நினைந்தும் ஒருசிலர் மீண்டும் மீண்டும் ஆரியப் பார்ப்பனர்க்குத் துணைபோவது எற்றுக்கோ? இக்கால் அமைச்சரவையில் வீற்றிருக்கும் பகுத்தறிவாளரில் சிலர் ஆரியர்க்குச் சார்பாய் நடந்து கொள்ளுகின்ற நிலையை உன்னுங்கால் நம் வயிற்று எரிச்சல் மிகவே செய்யும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கோயில்களும் மடங்களும் இடித்துத்தள்ளப்படாதவரை அல்லது அறிவுக்கூடங்களாய் மாற்றப்படாதவரை எத்தனைப் பகுத்தறிவாளர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தும் பயனில்லை. அமைச்சர்கள் பகுத்தறிவுணர்வில் திளைப்பவர்களாயிருந்து பயனில்லை மக்களையும் அவ்வுணர்வுக்கு ஆட்படுத்தும் துணிவும் வினைத்திட்பமும் தேவை. இதற்குத் தகுதியற்றவர்கள் அமைவாக இருந்துவிட்டாலே நன்று. அதுவன்றிப் பார்ப்பனர் செய்யும் இழிசெயல்களைப் பாராட்டுவதும் பொன்னாடை போர்த்திப் புகழாரம் சூட்டுவதும் எற்றுக்கோ?

அண்மையில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கீரனூரில் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் திரு. சுப்பையா அவர்கள் அவ்வூர்க் கோயிலில் இராமாயணச்சொற்பொழிவாற்றியபார்ப்பனப்புலவர் திரு. சிகாகரிசன் என்பாருக்குப் பொன்னாடை போர்த்தி இராவணன் வல்லாட்சியாளன் இராமன் நல்லாட்சியாளன் எனப் பாராட்டிப் புகழாரம் சூட்டியதாகக் கேள்விப்பட்டோம். இதுபோன்ற வினைகளில் இக்கால் பொறுப்பேற்றிருக்கும் பகுத்தறிவாளர் அமைச்சரவை ஈடுபடல் தமி

www.thamizham.net - Free E book No 7415

மூர்க்கே இழிவைச் சேர்க்கும். இதுபோன்ற செயல்களில் இனியும் அமைச்சர்கள் ஈடுபடுவதைப் பெரியார் வழிநிற்கும் பகுத்தறிவுத் தொண்டர்கள் வீணே பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதை அறிவுறுத்த விரும்புகின்றேம். அமைச்சர் பெருமக்களே! வடவனுக்கு வால்பிடித்துத் தமிழனுக்கு வாம் சேர்த்தது போதும். தமிழனின் போகின்ற மானத்தைப் போகாது நிறுத்துங்கள்; அதுதான் பகுத்தறிவு!

இனநலப்பாசறை
விராலிமலை 1—5—69

அன்பன்,
உறங்காப்புலி.

'தமிழ் வாழ்க!'

அன்புடையீர்!

கடந்த 19—4—69-ஆம் பக்கல் தாராபுரம் நகர்மன்றத் தேர்தல் விழாக்கூட்டத்தைப் பேராயக் கட்சியார் நிகழ்த்திய போதில், தமிழ் நாடு சட்டமன்றப் பேராயக்கட்சித் தலைவர் கருத்திருமனர் உரையாற்றக்கேட்டேன். 'மதுரையில், கல்லூரி மாணவர்கள், அமைச்சர் ஒருவர் கலந்துகொண்ட விழாவிறுதியில், நாட்டுப்பண் பாடக்கூடாதெனத் தடுத்து, எவனே ஒருவன்–பாரதிதாசன் என்பவன் பாடிய பாட்டாம், சங்கே முழங்கு என்ற பாட்டைப் பாடிக் கூட்டத்தை முடித்தார்கள்' எனக் கொதித்தார். மேலும், 'நான் அமைச்சனாக இருந்தால், நாட்டுப்பண் பாடக்கூடாதெனக் கூச்சலிட்டோரை, அங்கேயே தடுத்து நிறுத்திச் சுட்டுக்கொல்ல ஆணையிட்டிருப்பேன்' என்றும் கூறினர். நாட்டுப்பண் தமிழில் பாடவேண்டும் என்று தானே மாணவர்கள் கேட்டுக் கூச்சலிட்டனர்? அதில் என்ன தவறு கண்டிருந்தாலும், வீணே ஏன், பாவேந்தரை, 'எவனே ஒருவன், பாரதிதாசன் என்பவனும்' என்ற சொற்களால் இழிவுபடுத்த வேண்டும்? இதனல், நற்றமிழ் நெஞ்சங்கள் அங்கே புண்பட்டுக் கிடந்தன. கருத்திருமனரைப் போன்ற மொழிப்பற்றற்ற அரசியல்காரர்களால், இத் தமிழகமோ, தமிழ்க் குமுகாயமோ பயன்பெறப் போவதில்லை. இத் திமிர்ப்போக்காளர்களெல்லாரும் ஆட்சி மன்றேறி அரசோச்ச இனியும் தமிழர்கள், அரசியல் காரர்கள் பிடித்து வைத்து மண் பொம்மைகளாக வாளாவிருக்க வேண்டுமா? கருத்திருமனர் பேசும்போது அரசினரால் அமர்த்தப்பெறும் சுருக்கெழுத்தாளர்கூட அவர் தம் உரையைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். தமிழ்க் குமுகாயம் விழித்தெழவும், தமிழுக்குற்ற இன்னல் களையவுமே வாழ்ந்திருந்த

www.thamizham.net - Free E book No 7415

பாவேந்தரை இழிவுபடுத்தியவருக்குத் தென்மொழி வழியாகக் கண்டனம் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேழம் 4 எ 2000
தளவாய்ப்பட்டணம்

இன்னணம்,
அறவாழி.

எண்ணம் + செயல் = வாழ்வு

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். முறையான தமிழ்க் கல்வி கற்றவனல்லன் நான். ஆங்கிலமொழி ஏடுகளையே விரும்பிப் படித்து வந்தவன். 'தென்மொழி'யைக் கண்டதிலிருந்து இன்றுவரை விடாமல் படித்து வருகிறேன்.

தமிழ் மொழியைத் தூயநடையில் பேசவும் எழுதவும் அறியாதவன். இருந்தபோதிலும் ஏனைய இதழ்களை விட இதன் மீது அளவற்ற அன்புகொண்டிருக்கிறேன். ஒருசில நல்ல தமிழ்ச் சொற்களைப் பார்த்தபோது அவற்றையே எனது இல்லத்தில் புழங்கவிட வேண்டுமென உறுதிசெய்துவிட்டேன்.

நீட்டலளவில் 'விரற்கடை' என்பது குழந்தையின் விரற்கடை அளவா? இளைஞனுடைய விரற்கடை அளவா? இதற்கு வரம்பு எதுவும் இல்லையா" எனப்பகடிசெய்துள்ளார் ஒரு கட்டுரையாளர். (கண்ணதாசன் டிசம்பர், 1968.)

உண்மையான தமிழ்ப்பற்றுள்ளவர் என்றால், இவ்வாறு பகடி செய்வதைவிட்டு, முறையான ஓர் அளவை அமைப்பது பற்றி ஆய்வு செய்திருப்பார். அதைவிடுத்து ஆக்கப்பணியில் ஈடுபடுவாரைக் குறை காண முற்பட்டது, இவரது மொழிப்பற்றின்மையையே துலக்குகின்றது.

ஆங்கில மொழியில் 'ஆர்சுபவர்' (குதிரைவேகம்) என்ற சொல் இன்றுவரை புழங்கி வருகின்றது. இவரைப் போன்றோர் ஆங்கில அறிஞர்களிடம் சென்று 'ஆர்சுபவர்' என்றால் குதிரைக் குட்டியின் வேகமா, கிழக்குதிரையின் வேகமா, என்று கேட்பது தானே?

தங்களது உரைகளில் அறிவிற்கே முதலிடம் கொடுத்துவருகிறீர்கள் என நினைக்கிறேன். அறிவும் மனச்சாட்சியும் விழித்த நிலையிலேயே வைத்துக்கொண்டு வாழ்பவர்களால் போலியான அன்பு செலுத்துவது இயலாது. எனினும் பொதுத் தொண்டில் ஈடுபடுவோர் அன்பிற்கு மிகுந்த இடம் தரவேண்டும் என்பது எனது எண்ணமாகும்.

—செல்லத்துரை, குவாலாலம்பூர்.

www.thamizham.net - Free E book No 7415

நூலகந்தோறும் "தென்மொழி"

தனித்தமிழ் மறவ! வணக்கம்.

அல்லல் பல பட்டு ஒல்லும்வகையெலாம் செந்தமிழுக்கும் தமிழினத்திற்கும் "தென்மொழி" வழியாகவும் தனியாகவும் அருந்தொண்டாற்றிவரும் தனித்தமிழ்ச் செம்மலே! தங்களைப்போன்ற தமிழ்ச்சான்றோர் சிலர் வாழ்தலின் பயனுற்றுள், "தனித்தமிழ் இனிமேல் மாளாது; மாளாது; மாளாது," எனத் துணிவுடையோனாக உள்ளேன்! தமிழ்நாடு(ம்) அரசு தனித்தமிழ் இதழான "தென்மொழி"யை நூலகந்தோறும் இடம்பெறச் செய்யாமை குறித்துப் பெரிதும் கவல்கின்றேன். நூலகம் நடாத்துநர்களுள் பலருக்கு உண்மையான தமிழ்ப்பற்று இருப்பின் "தென்மொழி" நூலகம் பலவற்றுள் இடம் பெறு இவ்விழிநிலை ஏற்படுமோ? "தென்மொழி" இல்லா நூலகமெல்லாம் நூலகமாமோ? நூலகமாகா! தமிழக அரசும், உண்மையான தமிழர் என்பார் ஒவ்வொருவரும் "தென்மொழி" இதழின் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் (விலைபோட்டு வாங்கி) உறுதுணையாகல் வேண்டும். 'தென்மொழி'யின் வளர்ச்சி செந்தமிழின் வளர்ச்சியாம்.

மு ஞானசேகரன், நிலக்கோட்டை.

உரக்க ஒலியிடுக!

ஐயா,

நான் 28—3—69 ஆம் பக்கல் தங்களையும், தென்மொழிக்குடும்பத்தையும் காணவேண்டும் என்ற ஆவலில் கடலூர் வந்தேன். தாங்கள் தமிழுக்காகவும், தமிழனுக்காகவும் ஆற்றிவருகிற தொண்டு எவ்வளவு துன்பநிலையில் உள்ளது என்பதை நேரில் கண்டபின்னரே உணர்ந்தேன். தங்களுடன் நேரில் பேசியபோது நான் தங்களிடம் கண்ட ஏக்கப் பெருமூச்சுகளும், மெய்யுணர்வு விளக்கங்களும் இனி இந்தத் தமிழகத்தில் ஓர் ஒப்பற்ற தமிழ்ப் பெருமகனை (தொண்டனை)க் காண முடியாது என்பதை உணர்த்திற்று. தாங்கள் தென்மொழியை நிறுத்திவிடுவீர்களானால் தமிழன் இனி தலையெடுக்கப் போவதில்லை என்பதை உறுதி செய்துகொண்டேன். தமிழனுக்காகப் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் தாங்கள் ஏற்று இருக்கும் தமிழ் உணர்வு மங்கி மறைந்துவிடும். அதனால் நான் என் நண்பர்களிடம் கூறி இருக்கிறேன், "தென்மொழியை வளரச் செய்வது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுடைய கடமை ஆகும்." என்று. நான் இப்போது திருச்சியிலிருந்து மதுரைக்கு வந்துள்ளேன். மதுரையில் தென்மொழியை மிகுதியாய்ப் பரப்ப அனைத்து முயற்சிகளையும் எடுக்க இருக்கிறேன்.

www.thamizham.net - Free E book No 7415

இன்றைய தமிழர்கள் வெற்று ஆரவாரப் பேச்சிலும், கழிசடைப் பாட்டுகளைப் பாடுவதிலும், காமநோக்கத்திரைப்படங்களைக்காண்பதிலும் தங்கள் நாட்களை அழித்து வருகின்றனர்.

ஒரு புறம் அவர்களையும். மற்றொருபுறம் கட்சிப்பற்றின் கரணியமாகத்திரியும் உணர்வாளர்களையும், சமயச்சண்டையில் ஈடுபட்டு இருக்கும் தமிழர்களையும் தட்டி எழுப்ப வேண்டுமானால் "தென்மொழி உரக்க ஒலியிட்டு. இற்றைக்கால விளம்பரத்தோடு, தமிழர்களிடையே புகுந்து அவர்களை உண்மைத் தமிழர்களாகச் செய்ய வேண்டும் என்பதே என் அவா.

தங்களுடைய எழு ஆண்டுக்காலத் தென்மொழி தமிழ்நாட்டு மாணவர்களிடையேயும், மக்களிடையேயும், "தென்மொழி என்ற தனித்தமிழ்த் தாளிகை தமிழனின் கேடயமாக விளங்குகிறது" என்பதை உணர்த்தி இருக்கிறது, அவர்கள் எல்லாரும் தென்மொழிக் கேடயத்தை ஏந்தும் நாள் விரைவில் வர இருக்கிறது.

அன்பன்,
பொன். வளவன்,
திருப்பரங்குன்றப்பாதை, மதுரை-3.

உலகத் தமிழ்க் கழக அதிகார வுறுப்பினர்க்கும், நெறியீட்டுக் குழுவினர்க்கும், மாவட்டக் கிளைத் தலைவர்கட்கும்

அறிவிப்பு.

உ. த. க. ஆட்சிக்குழுவின் முதற்கூட்டம் அடுத்துவரும் ஆடவைத் திங்களில் நடைபெறும். நாளும் இடமும் திட்டமானபின் செய்தி அஞ்சல் வாயிலாக ஒவ்வொருவர்க்கும் தெரிவிக்கப்பெறும்.

இது முதற்கூட்டமாதலாலும், கழக விரிவும் வேலையும் முதலாட்டை விழாவும் பற்றிய பல முதன்மையான செய்திகள் சூழ்ந்து முடிபு செய்யப்பட வேண்டியிருத்தலாலும், அனைவரும் தவறாது வர அணியமாயிருக்க.

ஞா. தேவநேயன்,
தலைவன், உ. த. க.

www.thamizham.net - Free E book No 7415

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ ந. க/5/2000

கீழ்க்காணும் நகரங்களிலும், ஊர்களிலும் உலகத் தமிழ்க் கழகத்தின் கிளைக்கழகங்கள் அண்மையில் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள உண்மைத் தமிழன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து, தமிழ்த்தொண்டும் நாட்டுத் தொண்டும் புரிய வேண்டிக்கொள்கிறோம்.

1. சேலம் மாவட்டம்

அ. அம்மாப்பேட்டை-கிளைக்கழகம் தொடக்கம்: சுறவம் ௧ (1—2—69); தலைவர்: திரு. பொ. பழநிச்சாமி. க இ., ப இ.; துணைத் தலைவர்: திரு. சா. முருகேசன்; செயலர்: திரு. அ. கோபாலகிருட்டிணன்; துணைச்செயலர்: திரு. நா ஆறுமுகம்; பொருளாளர்: திரு. சி. இராசரத்தினம்.

ஆ. காமராசர் குடியேற்றம்- தொடக்கம்: சுறவம் ௫ திருவாளர்கள்: க. துரைராசலு, ஆ. ப. சீநிவாசன், அர்த்தநாரி ஆகியோர் முறையே தலைவர், செயலர், பொருளாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

இ. பட்டணம்-கிளைக்கழகம்: தொடக்கம்: மீனம்-௧0. திருவாளர்கள்: வே. மலையண்ணன் (தலைவர்); சேயோன் (செயலர்); ப. இரா. கோவேந்தன் (பொருளாளர்).

2. தஞ்சைமாவட்டம்.

அ, தஞ்சை-நகரக்கிளை: தொடக்கம்: சுறவம்-௧௩ (26-1-69) திருவாளர்கள்: இளஞ்சித்திரன் (தலைவர்); பா. இறையரசன் (செயலர்) தி. தாமரைச்செல்வன் (பொருளர்).

ஆ. உரந்தை-கிளைக்கழகம்: (தொல்காப்பியர் மன்றம்): தொடக்கம்: கும்பம்-உ௫ (9—3—69) திருவாளர்கள்: அ, இளமாறன் (தலைவர்); மு இளம்பரிதி (செயலர்), ப. இளம்வழுதி (பொருளர்).

www.thamizham.net - Free E book No 7415

3. திருச்சி மாவட்டம்.

அ. எதுமலை-கிளைக்கழகம்: தொடக்கம்: மீனம்-கஎ (30-3-69) திருவாளர்கள்: வீர. இளங்கோவன் (தலைவர்); எழிற்செல்வன் (செயலர்); நக்கீரன் (பொருளர்).

4. தென்னார்க்காடு

அ. தி-அத்திப்பாக்கம் கிளைக்கழகம்! தொடக்கம்: மேழம்-கO (22—4—69); திருவாளர்கள்: அ. இயேசுதாசன் (தலைவர்); அ. சந்தியாகு (செயலர்); இரா. மருதமுத்து (துணைச்செயலர்); மா. இராயப்பன் (பொருளர்);

5. கோவை

அ. அவநாசி—கி. க: தொடக்கம்: மேழம்-உச. திருவாளர்கள்: மா. பழநிமுத்து (தலைவர்); ப. துரையரசன் (செயலர்); ப. பாலசுப்பிரமணியம் (பொருளர்).

6. வடவார்க்காடு

அ. சுந்தரம்பள்ளி—கி. க: தொடக்கம்: மீனம்-க. திருவாளர்கள்: பெ, சுந்தரம் (தலைவர்); சு. ம. இரத்தினம் (துணைத்தலைவர்); சி. விநாயகம் (செயலர்); மு. மார்க்கபந்து (துணைச்செயலர்):

7. முகவை மாவட்டம்.

அ. வண்ணாங்குண்டு—கி. க, தொடக்கம்: மீனம்—உஅ. திருவாளர்கள்: இரா. அறிவுடைநம்பி (தலைவர்); உ. திருமாறன் (செயலர்); நா. இளமுருகு (பொருளர்).

ஆ. இராசசிங்கமங்கலம்—கி. க: தொடக்கம்: மீனம்—கச திருவாளர்கள்: மு. எழிற்கோ (தலைவர்); நா. ப. தென்னகவேந்தன் (செயலர்); ஆ. மா. அழகு (பொருளர்)

இ. இராமநாதபும்-நகரக்கிளை: தொடக்கம்: 7-4-69; திருவாளர்கள்: இரா. சேதுராமன் (தலைவர்); மும்முடிமுகிலன் (செயலர்); அ. மு. அ. இளம்பரிதி (பொருளர்).

ஈ. சிப்பிப்பாறை—கி. க: தொடக்கம்: 30-3-69; திருவாளர்கள்: பே. தாமசு, க. இ., ப. இ., (தலைவர்); அ. அய்யாக்கண்ணு க. இ., ப. இ. (செயலர்); கெ. கந்தசாமி (பொருளாளர்).

www.thamizham.net - Free E book No 7415

உ. மாயாகுளம்-கி. க: தொடக்கம்: மீனம்-கஎ. திருவாளர்கள்: எழில்வேந்தன் (தலைவர்); முகிழரசு (செயலர்); தமிழ்வளவன் (பொருளர்).

ஊ. சித்தனேந்தல்-கி. க: தொடக்கம்: கும்பம்-கக. திருவாளர்கள்: வை. அறிவுடைநம்பி (தலைவர்); கா. தமிழ்மாறன் (செயலர்); ஆ. மணிமாறன் (பொருளர்).

எ. நயினார்கோயில்-கி. க: தொடக்கம்: கும்பம்-கஎ. திருவாளர்கள்: சி. கணேசன் (தலைவர்); மு. பூங்குன்றன் (செயலர்); திரு. மெய்யடியான் (பொருளர்).

ஏ. வெளியக்கோட்டை—கி. க: தொடக்கம்: மீனம்-கக. திருவாளர்கள்: வேலு. சீரன் (தலைவர்); இரா. சேரன் (செயலர்); மு. அழகப்பா (பொருளர்),

ஐ. திருப்புல்லணை—கி. க: தொடக்கம்: கும்பம்-உஅ: திருவாளர்கள்: அறிவன் (தலைவர்); மாறன் (செயலர்); எழிலரசன் (பொருளர்).

ஒ. சனவேலி— கி. க: தொடக்கம்: மேழம்—உ௭. திருவாளர்கள்: க. அழகுமணாளன் (தலைவர்); சுப. இயலரசன் (செயலாளர்); இ. செல்வரசு (பொருளர்).

ஓ. சிக்கல் கி. க: தொடக்கம்: (தெரியவில்லை) திருவாளர்கள் தாசுதீன் (தலைவர்); அரண்மனைச்சாமி (செயலர்), அபுதாகீர் (பொருளர்)

8. புதுவைமாநிலம்

அ புதுவை-நகரக்கிளை. தொடக்கம்: மீனம்-க. திருவாளர்கள்: மீட்பன் (தலைவர்); வளவன் (செயலர்); அருள் (பொருளர்).

அறிவிப்பு.

ஆசிரியரின் வெளியூர்ச் செலவு காரணமாகவும், இன்றிமையாத கட்டுரைகள்சில இவ்விதழில் இடம்பெற வேண்டியிருந்தமையினாலும், நூராசிரியமும், "தன்னியக்கம் பற்றிய சில விளக்கங்கள்" என்னும் கட்டுரையும் இவ்விதழில் வெளியிடப்படவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

அமைச்சர்,
"தென்மொழி",

www.thamizham.net - Free E book No 7415

பொருள் அருளேபோற் போற்றி வழிமொழிவர் என்பதிலோர் ஐய மில்லை. தாங்கள் செந்தமிழ்ச் சீர்மைக்கும், நீர்மைக்கும், சிறப்புக் கொண்டாற்றி வரும் பணியினுக்கும் வரம்பில்லை. தாங்கள் தென் மொழி வழியாய் விடுக்கும் ஒவ்வொரு கருத்துரையும், அறிவுரையும், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், செழுமையும், கொழுமையும் விளங்கப்பெற்ற தமிழ் நாகரிகப் பண்பாடு, கலை வாழ்க்கை வழிமுறைகளுக்கும், ஒட்டுமொத்தமாகச் சேர்த்துயாத்த தமிழ் இனத்தின் சிறப்பு வரலாறுகும். இது போலிப் புகழ்ச்சியன்று. தென்மொழி இதழினைத் திங்கள்தொறும் படித்துவரும் எம்போன்ற உள்ளுணர்வாளர் அறிவர், தங்களின் அருந்தொண்டினையும், தென் மொழியின் பெற்றியையும். அறியாப் போலித் தமிழர்களும், அரசி யல் ஆரவாரக் கூட்டகைகளும் உணரார்; தமிழ் உணர்வின்றித் தன் மானமின்றி, இனத்தின்பாற் பற்றின்றித் தமிழர்களைப் பகைவனின் படுகுழிக்குத் தமிழனே வழிநடத்தும் கொடுமை நந்தமிழ் நாட்டி லன்றே காணுகின்றேம்! இவர்களுக்கு வெட்கமும், நாணமும், மான மும் உண்டெனில் நற்றமிழ் மக்கள் வறுமையிலுழந்தும், சிறுமையில் நலிந்தும், உரிமையின்றிப்பெருமைகுன்றி, கொத்தடிமைகளைப்போல் நடத்தப்படும் மட ஆரிய கூடாரக் கும்பலில் தோன்றிய வட வல் லாட்சியினின்று விடுதலைபெறத்தங்களின் தனித்தமிழ்இயக்கத் திசை யிலன்றே திரும்பியிருப்பர், நேர்மைவழி நடவாது வடவனின் வல் லாட்சிக்கும், ஆரிய இழிவும் அழிவும் மலிந்த கூடா ஒழுக்கக் கோட் பாட்டிற்கும், வாழ்த்துக்கூறி வாய்ப்பேறபடும் ஏந்து பார்த்து வடச் சந்தையில் நம் நாகரிகக்கலை பண்பையும் மானத்தையும் விற்று வயிறுவளர்க்க நினைக்கும் வஞ்சர்களையும் அவர்தம் இழிசெய லையும், இனியும் இம்மியும் பொறேம்.

தமிழ் ஏறே. தங்களின் ஆணையைத் தலைமேற் கொண்டோம். துயிலினின்று நீக்கம் பெற்றேம்; விழித்துவிட்டோம், ஏறுநடை போட எழுந்துவிட்டோம் கட்டளைக்குக் காத்துள்ளோம். தங்களின் சுட்டுவிரல் சுட்டிக்காட்டும் திசையை நோக்கியுள்ளோம் கட்டளை யிடுங்கள்; நாங்கள் கணைகள்! நாணேற்றுங்கள்! நாங்கள் கட்டப் பட்ட காளைகள்; கட்டறுத்துவிடுங்கள்! நாங்கள் அடைபட்டுக் கிடக் கும் அரிமாக்கள்; திறந்து விடுங்கள்! யாண்டும் நீண்டு நிலைக்க வல் லது தமிழே! உயிரன்று.

–பொன். மாந்தனரிமா, பெங்களூர்-21. [மேழம் உக]

() இருபதாம் நூற்றுண்டின் இன்றமிழ்ப் புரவல! அன்னை மொழி யாம் கன்னற்றமிழின் காவல! திறம் மறந்த தமிழரின் மறம் உணர்த்த எழுந்த மடங்கலேறே! நிலைமறந்த தமிழ்த்தாயின் தளர்வகற்றத் தோன்றிய கரிபால்டியே! எங்களின் நெஞ்சார்ந்த செந்தமிழ் வணங்கல் உரித்தாகுக! கடந்த மீனம் இதழில் நெய்வேலி நண்பர் ஒருவரின் அறிவு-ஆய்வுமடல் கண்டோம். புகழ்தல்-திறனாய் தல் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை-மாறுபாட்டை முதற்கண் நண் பர் தெளிய அறிதல் நலம்; இன்றிமையாததுமாகும். அண்ணாவின் செயலையும்-இயல்பையும் தாங்கள் குறைத்து மதிப்பிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார் ஐயகோ! என்னே அறியாமை! 'அண்ணா தமிழிற்கு தமிழருக்கு-தமிழகத்திற்கு ஆற்ற எண்ணியது ஏராளம்; ஏராளம். ஆனால், அவரால் ஆற்ற இயன்றது இவ்வளவே! எனவே, நாம் அவ

(அடுத்தபக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7415

ருக்குப் புகழ்ப்பரணி பாடிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவரது கனவுகளை நனவாக்க வேண்டும்; எண்ண அலைகளுக்குச் செயல் வடிவம் சமைக்கப் பாடாற்ற வேண்டும், என்ற தங்களின் தன்னலவுணர்வற்ற—தமிழினப் பாங்குணர்த்தும்—ஆசிரியவுரையை—அறிவுரையை—அறவுரையைக் காய்தற் கண்ணொடு நோக்கியுள்ளார் நண்பர். முகத்திலே கரியைப் பூசிக்கொண்டு ஆடியை நோவானேன். குறைமதியினரின் கூப்பாடுகளுக்குத் தலைசாய்க்கத் 'தென்மொழி' தனிப்பட்ட ஒருவரின் இதழன்று. ஓர் இயக்கத்தின் இதழ்! இதை நண்பர் மறந்தது ஏனோ? நண்பரே! காய்தல் உவத்தலின்றி ஆய்தல் நன்று!

—மு. இளம்பரிதி, செயலர், தொல்காப்பியர் மன்றம், உரந்தை. (ந. ந. உ000)

O ''தண்டமிழ்காக்கும் செம்மல் ஏறே! வணக்கம். மொழி, இன, நாட்டு நலங்கருதித் தாங்கள் எழுதிவரும் ஆசிரியவுரை மிக நன்று. நன்று செய்வது நமக்கு நல்வாழ்க்கை யென்பதை மறந்து,வாழ்வின் வளத்தைத்துறந்து, தன்னையும்மறந்து வாழ்வது தமிழரின் நிலையாம் ''போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித்தூற்றுவோர் தூற்றட்டும்''. தாங்கள் சோர்வடையாது தமிழனுக்கும், தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் நன்மை பயக்கத்தக்க கருத்துகளை அஞ்சாது எடுத்துச் சொல்லித் தமிழ் மக்களின் அகக் கண்களைத் திறக்க விழைகிறேன். அஃதுடன் மொழிப்பெரும் புலவர். ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பாடற்பகுதிகள், சமற்கிருதத்தில் தமிழ்ச்சொற்கள் இவற்றை மிகுதிப் படுத்தவும். எவர்க்கும் அஞ்சாது துணிந்து செயல்படுக! தங்களைப் போன்ற தமிழ் உள்ளங்கள் விழித்தெழுந்து, தமிழகம் ஆரியர் அடிமையிலிருந்து விடுதலைபெற தமிழர் வாழ்க்கை வளம்பெற, தங்களைப் போன்றோர் நலம்பெறல் வேண்டும்.

—அழ. கோவிந்தராசன், கோலாலம்பூர், மலேசியா.

O தாங்கள் தென்மொழி தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை தங்களைப் பற்றி மிகவும் அறிந்து, முற்றுகத் தங்கள் கொள்கைவழி நடக்க என்றும் அணியமாகிக் கொண்டுவரும் அன்பன் எழுதும் நேயமடல். தங்கள் உயரிய உள்ளத்தின் உண்மையையும்-உண்மை வழி விரவிய வாய்மையையும் அவ்வழிச் செல்லும் மெய்ம்மை வாழ்வியலையும் அறிந்த நல்லார் கூறுவர் தங்களை ஒரு மெய்யுணர்வாளர் என்று. தென்மொழி கும்பத்திங்கள் வெளியீட்டில் தங்கள் வேண்டுகோள்மடல் விரிந்த உள்ளத்தின் பரப்பை வெளிக்காட்டிய பெற்றி கண்டு உளமுவந்து போற்றினேன். தாங்கள் அறிந்து அடக்கியுள்ள மெய்யறிவு பிறர்க்கு ஒரு கனவுலகக் காட்சியாகவே தோன்றும். இத்தகு நிலையினை எண்ணிச் சோர்ந்துவிட வேண்டா.

—பெ. புதுமைப்பிரியன், மலாக்கா, மலேசியா, (மேழம் ந)

O *தமிழரின் தன்மானங் காக்கத் தமிழை*
அமிழ்திலே தோய்த்தெடுத்(து)அன்பாய்—இமிழ்கடல்சூழ்
தென்னாட்டார்க் கூட்டுந் திறமைமிகு திங்களிதழ்த்
''தென்மொழியே'' வாழி சிறந்து!

—வி. மு. குழந்தை, கூச்சூர், மாதரஅள்ளி (அஞ்) தகடூர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7415